www.tamilarangam.net

# சக்தி

## TAMILSK KVINNE TIDSSKRIFT



" எமது போராட்டம் ஆண்களுக்கு எதிரானதல்ல.
ஆண்களையும் பெண்களையும் பாரபட்சமாக நடத்தும்
இந்த சமூக அமைப்பு முறைக்கு எதிரானதே "

சக்தி 3 : 1 1993

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் அறிமுகம்



**THE SECOND SEX**
**Simone de Beauvoir**

இன் நூற்றாண்டின் பிரபல பெண்ணிலைவாதியும் தத்துவப் பேராசியரும் எழுத்தாளருமான பிரான்சு நாட்டைச் சேர்ந்த Simon De Beauvoir இன் பெண்ணியம் பற்றிய தத்துவார்த்த ஆய்வான The Second Sex 1949 இல் வெளிவந்தது.

பெண் என்பவள் யார் ? என்ற கேள்விக்கு வெறும் கருப்பையே அன்றி வேறில்லை, அழுக்கின் பிறப்பிடம், இவ்வுலகில் சாத்தானின் பிரதிநிதி, படைப்பில் முற்றுப் பெறாத ஆண் என்று மதங்களும்,

அழகும் தூய்மையும் நறுமணமும் நிறைந்த மலர், சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் மாய சக்தி கொண்ட இனிமையான படைப்பு என்று பல உவமானங்களைக் கவிஞர்களும்,

விபச்சாரி, பத்தினி, காதலி, மனைவி, தாய் . என்று பெண்ணின் பாத்திரங்களின் அடிப்படையில் சமூகமும் பதிலிறுக்ககின்றன

ஆனால் ஆண் என்பவன் யார் '' ஆணின் வரைவிலக்கணம் என்ன ' என்ற கேள்விக்கு பதில் ஆண் ஆண்தான் ' முதன்மையான சுதந்திரமான தனித்தன்மை மேம்ப கொண்ட(வன் )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே பெண் தன்னிலையற்ற (மேம்படாத) தங்கி வாழும் இரண்டாம்தர பாலினள்.

காலங்காலமாக ஆராயப்படாமல் சமூகத்தில் நிலவி வந்த பெண்களின் இரண்டாந்தரப் பாலினளாகவுள்ள நிலைமையையும், இரண்டாம் தர பாலினளாக நடத்தப் படுவதையும் The second sex இல் ஆராய்கிறார் சீமோன்.

இதுவரை பலர் பெண்களைப் பற்றி ஆராய்ந்திருந்த போதிலும் சீமோனின் The second sex அவைகளுள் முதன்மையான தத்துவ ஆய்வாக இன்றும் கருதப்படுகிறது, மதிக்கப்படுகிறது.

சீமோன் தனது இன்னொரு தத்துவார்த்த வெளியீடான Memoris of a dutiful daughter ( 1958) இல் கூறுவது போல்அவர் வாழ்ந்த சூழலும் அதில் பெற்ற அநுபவங்களுமே The second sex இன் தனித்தன்மைக்கு மூல காரணம் எனலாம்.

1908 ஆம் ஆண்டு மத்தியதர குடும்பத்தில் பிறந்த சீமோன் தன் வர்க்க சூழலில் தன் தனித்தன்மையும், சுதந்திரமும் எவ்வாறு அடக்கப் படுகிறது என்பதை அநுபவத்தில் கண்டார்.

கல்வி கற்கும் நாட்களில் இருப்பியல் ( existentialism) தத்துவ மேதையும் பின்னாளில் சீமோனின் உற்ற

நண்பருமான Jean Paul Sartre , பிரபல எழுத்தாளர் Albert Camus என்பவர்களுடன் இணைந்து சுதந்திரம் விடுதலை பற்றிய தத்துவார்த்த விவாதங்களை நடாத்தியதுடன் இவைகளுக்காக போராடவும் செய்தார்.

பெண்களின் பிரச்சனை வீட்டின் நான்கு சுவர்களுள் அடங்கியதொன்றாகவே கருதப்பட்டது.

அது சமூக ரீதியானதென்றோ, அரசியல் ரீதியானதென்றோ எவரும் சிந்திக்காத நிலையில் முதன் முதலில் ஓர் முற்று முழுதான ஆய்வை இருப்பியல் மாக்சிச தத்துவங்களின் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதுதான் The second sex.

இரண்டு பாகங்களைக் கொண்ட இந்நாலின் முதற்பாகம் ஆதிப் பொதுவுடமைச் சமுதாயத்திலிருந்து இன்றுவரை வரலாற்று ஓட்டத்தில் பெண்களின் சுதந்திரமும், தனித்தன்மையும் பறிக்கப்பட்டு இரண்டாந்தர பாலினராக்கிய காரணிகளை விரிவாக ஆராய்கிறது.

. . . >> ஆதியிலிருந்து இன்றுவரை சமூகத்தில் ஆணின் பாத்திரம் முதன்மையும், தனித்தன்மையும், மேம்பாடு கொண்டதாகவும் பெண்களின் பாத்திரம் இரண்டாம் தரமான மேம்பாடற்றதாகவுமே இருந்து வருகிறது >>. . .

. . .>> ஏன் தாய்வழிச் சமூகத்திற் கூட பெண்கள் தனித்தன்மையும், சுதந்திரமும் கொண்ட தன்னிலைமை உடையவர்களாக இருந்ததில்லை. .. ..>>

.. . >> தாய்வழிச் சமூகம் பெண்களின் பொற்காலம் என்பது வெறும் மாயையே . . >> என்கிறார்.

ஏனெனில் தாய்வழிச் சமூகத்தில் பெண்ணின் நிலை ஒரு வகை 'மாயை' அல்லது மத ரீதியான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

பூமி தாயாகவும், பெண் என்பவள் நிலமாகவும் கருதப்பட்டாள். நிலத்திற்கு இருக்கும் விளையும் சக்தியும், பூமிக்கு இருக்கும் எதையும் தாங்கும் / பொறுத்துக் கொள்ளும் சக்தியும் பெண்ணிற்கு இருப்பதாக நம்பப் பட்டது.

பெண் இயற்கையில் ஒன்றானவள், அவள் இயற்கைக்கு மேம்பட்டவளோ அல்லது அதை அடக்கும் சக்தி கொண்டவளோ அல்லள். (அவள்) பெண் இயற்கையில் ஓர் அங்கம், ஆணைப் போல் 'மனித' தன்மை கொண்டவள் அல்ல ; ஆண் இயற்கையிலும் மேம்பட்டவன். . .

www.tamilarangam.net

.. . << சமூகம் என்றும் ஆணின் ஆட்சிக்குட்பட்டதாகவே இருந்து வருகிறது. அதன் அரசியல் அதிகாரம் ஆணின் கைகளிலேயே இருந்து வருகிறது. .>> என்றும் விளக்கிறார்.

ஆகவே தாய்வழிச் சமுகத்திலிருந்தது போல் பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்றோ அல்லது அந்த நிலை போன்று திரும்பவும் வர வேண்டும் என்றோ அல்லது அச்சமுதாயமே பெண்களின் விடுதலைக்கு அளவுகோலாக பாவிக்கப்பட வேண்டும் என்றோ கோருவது சரியானதல்ல, அது பெண்களின் முற்றுமுழுதான விடுதலையின் அளவுகோலாக முடியாது.

அப்படியானால் அளவுகோல் என்ன?
எப்படியான விடுதலையை பெண்கள் கோர வேண்டும் ?
ஆணுக்கு சரிசமமான விடுதலையா?

அதாவது பெண் உடலியல் தவிர்நத் அனைத்திலும் ஆணாக மாறுவதா?

. . . << பெண்களின் விடுதலை/ சுதந்திரம், அவளின் ' இருப்புடன்' (existence), தனித்தன்மையும், அகநிலையுடன் தன்னிலையுடன் சம்பந்தப்பட்டது. . >>

அதாவது தனது இழந்துபோன தன்னிலையை மீளப் பெறவும், தனித்தன்மையையும், தனது இருப்பையும் நிலைநிறுத்திக் கொள்ளவும், அகநிலைசார்ந்து தன் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளவும் எந்த அளவிற்கு ஒரு சமூகத்தில் வாய்ப்பு/சுதந்திரம் உள்ளது என்பதே அளக்கப்பட வேண்டியது.

ஆகவே அளவுகோல் என்பது ஒவ்வொரு பெண்ணின் அகநிலை சார்ந்தது. தான் எந்த அளவு சுதந்திரமாய் உள்ளேன் என்ற சிந்தனையுடன் தன்னிலையுடன் சம்பந்தப்பட்டது.

பெண்ணடிமைத்தனத்தில் பொருளாதாரக் காரணிகள் பற்றிக் கூறுகையில் சீமோன் மாக்சிச பொருள்முதல்வாத ஆய்வுடன், மாக்சிச சமூகவியல் கண்ணோட்டத்துடன் பெரிதும் உடன்படுகிறார்.

... . << பெண்களின் சமூகப் பாத்திரத்தை சமூகத்தில் நிலவும் பொருளாதார அமைப்பே தீர்மானிக்கிறது >> என்று கூறும் சீமோன் ' எப்போது தனிச்சொத்துரிமை உருவானதோ அப்போதே பெண் ஆணுக்கு அடிமைப்பட்டவளாகிறாள் ' என்று கூறும் ஏங்கெல்சுடன் உடன்படுகிறார்.

ஆனாலும் ஏங்கெல்ஸ் கூறுவது போல் ' தனிச்சொத்துரிமை எப்போது ஒழிக்கப்படுகிறதோ, அப்போதே பெண்ணும் விடுதலை அடைகிறாள், ஆணுக்கு நிகரான வாய்ப்பைப் பெறுகிறாள்' எனும் கருத்தை சீமோன் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏனெனில், ... . << மனிதர்கள் தம் தனித்தன்மையையும், இருப்பையும் தங்க வைத்துக் கொள்ளவும், அறிவு ரீதியான தம் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும், அடுத்தவர்களை ஒடுக்குகின்றனர். அடுத்தவர்களின் தனித்தன்மையையும், இருப்பையும் இல்லாதொழிக்கின்றனர் . . . >>

இதனடிப்படையில் பெண் வெறும் தனிச்சொத்துரிமைக்கு மட்டும் அடிமைப்பட்டிருக்கவில்லை, ஆணின் அறிவு மேலாதிக்கத்திற்கும், அவன் இருப்பிற்கும், தனித்தன்மைக்கும் அடிமைப்பட்டுள்ளாள். அவனது மேம்பட்ட தன்மை பெண்ணை இரண்டாம்தர பாலாக்கியுள்ளது என்கிறார் சீமோன்.

ஆகவே பெண்ணின் விடுதலைக்கான போராட்டம் சமூக பொருளாதார மாற்றத்திற்கானது மட்டுமல்ல அது ஆண் ஆதிக்கத்திற்கும் எதிரானது வர்க்க விடுதலையின் பின்பும் தொடரும்.

மேலும் குடும்பம் பற்றிக் குறிப்பிடுகையில் << குடும்பமும் அதைக் கட்டிக் காக்கும் விதிகளும் பெண்களின் கால்களையும் கைகளையும் இறுகப் பிணைத்துள்ளது . . .தனிச் சொத்து அமைப்பு மாற்றப்படும் போது குடும்பம் என்ற அமைப்பும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் இல்லையேல் பெண் முற்று முழுதான விடுதலையை பெற்ற வளாக முடியாது. . >>

www.tamilarangam.net

குடும்பம் என்ற அமைப்பில் நடைபெறும் தொழிற்பாட்டில் பெரும் பங்கு வகிப்பது பெண்ணே ( அது அவள் இயல்பு என்ற நியாயமும் கற்பிக்கப்பட்ட நிலையில் ).

பிள்ளை பெறுவது, அதை வளர்ப்பது, ஆணுக்கு உடல் உறவு மூலம் அவனை திருப்திப்படுத்தல் என்று அனைத்தும் அவள் மீதே சுமத்தப்பட்டுள்ளது.
இப்பழு எந்த நிலையிலும் ' குடும்பம் ' என்ற வரையறைக்குள் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் முற்று முழுதாக பகிரப்பட முடியாதது.
அது சாத்தியமும் அல்ல ஆகவே குடும்பம் என்ற அமைப்பு டாக்கி எறியப்படல் வேண்டும் என்கிறார் சீமோன்.

அப்படி தூக்கி எறியப்பட்டால் குடும்பம் வகித்து வந்த பொறுப்புகளை யார் பொறுப்பேற்பது ?
அப்பொறுப்புகள் நிறுவன/ ஸ்தாபன மயப்படுத்தப்படல் வேண்டும்.

உதாரணமாக குழந்தை வளர்ப்பு, வயோதிபர் கண்காணிப்பு போன்றவற்றை குழந்தை வளர்ப்பு இல்லங்கள், வயோதிபர் இல்லங்கள் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் பெண்ணிடமிடருந்து பொறுப்புக்களை குறைக்கலாம். இதன் மூலம் பெண்கள் மேலதிருக நேரத்தையும் ஒய்வையும் பெறுகின்றனர் சமூக அரசியல் அரங்குகளில் முற்றுமுழுதான தமது பங்கை வகுக்க வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

(ஐரோப்பாவில் வயோதிபர்களை பராமரிக்கும் பொறுப்பு நிறுவன/ ஸ்தாபன மயப்படுத்தப்பட்டமையினால் பெருமளவு பெண்கள் வீட்டு வெளியே வேலை செய்யும் வாய்ப்புக்களை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது என்கிறர் சீமோன்

The second sex இன் இரண்டாம் பாகத்தில் ஆண் ஆதிக்க சமூகத்தில் பெண் பிறந்தது முதல் இறக்கும் வரை எவ்வாறு நடத்தப்படுகிறாள்; அவள் எவ்வகையான அநுபவங்களைப் பெறுகிறாள் என்பதை சீமோன் ஆராய்கிறார்.

. . .<< பிறக்கும் போதே பெண் 'பெண்ணாக' பிறப்பதில்லை. **'பெண்மை'** என்பது இயற்கையில் கிடையாது. . . >> என்கிறார்.

பெண்களும் பிறக்கும் போது ஆண்களைப் போல முதன்மையான, (மேன்மையுடைய ) இயற்கையானவர்களே. ஆனால் அவள் பிறந்துள்ள ஆணாதிக்க சமூகம்தான் நலனுக்கு ஏற்ற வகையில் பெண்களை அக, புற நிலையில் மாற்றம் செய்ய ; (அவள் இயல்புக்கு,/இயற்கைக்கு மாறாக) விதிகளையும், சமூகப் பாத்திரங்களையும் வகிக்கிறது.
இவ்வாறு ஆண்கள் வகுத்த விதிகளும் சமூகப் பாத்திதரங்களும் அவைகளின் குணாம்சமுமே 'பெண்மை' எனப்படுகிறது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட 'பெண்மை' பெண்களின் ஒவ்வொரு பருவ மாற்றத்திலும் ( உடல் ரீதியான மாற்றம் ) கொஞ்சம் கொஞ்சமாக திணிக்கப்படுகிறது.

பெண் குழந்தையாக இருக்கும் போது அவள் ஆணிலும் மேலானவள் அல்ல என்பது வலியுறுத்தப்படுகிறது.

பெண்குழந்தையின் இயல்பான விருப்பு ஒடுக்கப்பட்டு நிபந்தனைகள் விதிக்கப் படுகிறது.

அடுத்த வீட்டுப் பையனுடன் மரமேறி விளையாடுவது தடுக்கப்பட்டு பொம்மைகளுடனும் சின்ன சின்ன சட்டி பானையுடனும் விளையாட விடப்படுகிறாள். அவள் அம்மா தனக்கு பாராம்பரியமாக புகுத்தப்பட்டதை தன் பெண் குழந்தைக்கும் புகுத்துகிறாள். குழந்தைக்கு (தன்) அம்மா உதாரணமாகிறாள்.

www.tamilarangam.net

அயல் வீட்டு பையனுடன் அப்பா அம்மா விளையாட்டு விளையாடும் போது சொல்கிறாள் " நீ அப்பா வேலைக்கு போவியாம், நான் அம்மா சமைச்சு வைப்பனாம் " பெண்களின் இயல்பான இடம் சமையலறை என்று சிறுவயதிலேயே பயிற்றப்படுகிறது.

குழந்தை உடலியல் மாற்றத்தால் பருவ நிலை அடைகிறாள். ஆணின் வாரிசை உருவாக்க உடலுறவு கொள்ள தயாரகிறாள். கொண்டாடப்படுகிறது. நீ ஆணின் சொத்து, உன் உடல் அவனை சந்தோசப்படுத்த தயார் நிலை அடைந்து விட்டது. சந்தோசப்படு, இதுதான் இயல்பு, அவனைச் சந்தோசப் படுத்துவது தான் உன் சந்தோசம் என்று கற்பிக்கப் படுகிறது.

இந்நிலையில் அவள் முழுமையானவள் அல்ல. உடல், உள ரீதியாக ஆணிலேயே தங்கியுள்ளாள். சில உணர்வுகள் தீர்க்கப்பட வேண்டும் எனில் ஆண்தான் ஒரே தீர்வு என வற்புறுத்தப்படுகிறது. அவள் உடல் உணர்வுகள் அவளுக்கு அந்நியமாக்கப் படுகிறது. அவள் ஒரு ஆணுடன் உடலுறவு கொள்ளும்போது தன் உடல் உணர்வுகள் தனக்கு அந்நியமான தென்று அநுபவரீதியாக கண்டு கொள்கிறாள்.

ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும் போது அங்கு 'கொடுப்பதும்' 'எடுப்பதும் ' நடைபெறுகிறது. ஆண் எடுக்கிறான். பெண் கொடுக்கிறாள். இதனடிப்படையில் ஆணே நிகழ்வுக்குத் தலைமை தாங்கிறான். அவன் நிபந்தனையின் கீழ் / விருப்பத்தின் பேரிலேயே உடலுறவு நடைபெறுகிறது.

பெண்ணின் பாலியல் உணர்விற்கும், ஆணின் பாலியல் உணர்விற்கும் பாரிய வித்தியாசங்கள் உண்டு. ஆணின் விருப்பப்படி அவன் தலைமையில் உடலுறவு நடைபெறுவதனால் பெண்ணின் உணர்வுகள் தீர்க்கப்படாமல் விடப்படுகிறது என்கின்ற சீமோன் சொல்கிறார்

. . . << பெண்ணின் உணர்வுகளை சில சொற் பிரயோகங்களைப் பாவிப்பதன் மூலமும் ஆண்கள் அடக்குகின்றனர் 'போதுமா ?' 'திருப்பதியா ' ' இன்னும் தேவையா? ' ' நன்றாயிருந்ததா ? ' என்பது போன்ற சொற்களை பாவிப்பதன் மூலம் உடலுறவிற்கு ஓர் இயந்திர செயற்பாட்டு வடிவம் கொடுப்பதுடன் தமது மேலாதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்கின்றனர் . . .>>

இறுதியாக The second sex பற்றி பெண்ணிலைவாதிகளின் சில விமர்சனங்களைப் பார்ப்போம்.

பெண்கள் எப்போது எந்த வகை சமுதாயத்தில் முற்று முழுதான விடுதலை அடைவார்கள் எனும் கேள்விக்கு சீமோன் கூறும் பதில் . .

.<< பெண் தனது முற்றுமுழுதான சுதந்திரத்தை சோசலிச/ (கம்யூனிச) வர்க்க பேதமற்ற சமுதாயத்தில்தான் பெற முடியும். அச் சமுதாயத்திவ் தான் அவள் உரிமைகள் வலியுறுத்தப்பட்டு, பாதுகாக்கப்படும் . . .>> என்பதாகும்.

அதாவது சீமோன் Marx உடன் உடன்படுகிறாள். அத்துடன் மாக்சிசத்துடன் இருப்பியல் தத்துவக் கோட்பாடுகளையும் கலந்தே மேற்கண்ட பதிலை அளிக்கிறாள்.
இப்பதில் அமெரிக்க பெண்ணிலைவாதிகளினால் வெகுவாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. அவர்களின் பிரச்சனை Marx உடன் சீமோன் உடன்படுவதே.

இங்கிலாந்தைச் சேர்ந்த Toril Moi தனது Sexual/ Textual Politics எனும் நாலில் இருப்பியலையும் மாக்சிசத்தையும் போட்டு குழப்பியுள்ளார் சீமோன் என்று விமர்சிக்கிறார்.

www.tamilarangam.net

இடதுசாரிப் பெண்ணிலைவாதியான Mary Evans தனது Dilemmas of a feminist radical எனும் நூலில் மார்க்சிசத்தை சீமோன் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று விமர்சிக்கிறார்.

இப்படி பலவகையான விமர்சனங்கள் சீமோன் மீதும் The second sex மீதும் வைக்கப்பட்ட வண்ணம் இருக்கிறது, விவாதிக்கப்படுகிறது. ஆனாலும் பெண் விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து தரப்பினரும் The second sex இனை வழிகாட்டியாகவும் சீமோனை தம் முன்னோடியாகவும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இப்புத்தகம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழுக்கும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். இன்று எம் தேசத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் எம் பெண்களிடையே எழுந்து வரும் பெண்ணிலைவாதத்திற்கு வழிகாட்ட வேண்டும்.

[<< . . .>> என்ற அடையாளமிடப்பட்டவைகள் சீமோனின் சொந்தக் கருத்துக்கள். ]

**கிருபா**

## திசைகள்

காலையில்
சூரிய நமஸ்காரம் செய்தன
மேற்கு வானங்கள்.
மாலையில்
சிறைப் பிடித்துக் கொண்டன சூரியனை
அதே வானங்கள்.


மீண்டும் காலை வருமென்பதை
கிழக்குகள் அறியும்.
சூரிய நமஸ்காரம் செய்ய
மீண்டும் தயாராகுக மேற்குகளே

வடக்கும் தெற்கும்,
திசைமானி சொல்லும்
எல்லாத் திசைகளும்
நட்சத்திர உதிரிப் பூக்களைச் சுமக்கும்
வெறும் மௌன சாட்சியங்கள் மட்டுமே.

பானுபாரதி.

www.tamilarangam.net

# அத்துமீறல்கள்....



## ராஜினி.

பஸ்சில் ஏறுகிறேன். கண்டக்டர் என் இடுப்பில் கைபோட்டு என்னை உள்ளே தள்ளுகிறான்.

நெரிசலான பஸ்சில் கால் வைக்க இடம் கிடைத்தால் போதும் என்று நினைக்கும் எனக்கு இந்த அசிங்கம் பெரிதாகவா படுகிறது ?

கண்டக்டரை மனதிற்குள் திட்டியபடி --- சில நேரம் எதுவுமில்லை.

பஸ்சில் நுழைகிறேன்.

பின்னால் நிற்கும் இளைஞன் முதுகோடு உரசுகிறான். அருவருப்பாய் இருக்கிறது.

அவனை ஒரு முறை திரும்பி முறைத்துப் பார்த்து விட்டு சற்று முன்னால் நகர்ந்தால் முன்னால் நிற்கும் நடுத்தர வயது மனிதனால் இடிக்கப் படுகிறேன்.

இப்படியே பஸ்சிற்குள் ஒரு மௌன போராட்டம்....

ஆஸ்பத்திரி அறையில் அமர்ந்திருக்கிறேன்.

பல் டாக்டர் முப்பதைத் தாண்டாத இளைஞன்.

என் பல்லைப் பார்ப்பதாய் முகத்தைத் தடவுகிறான்....

எனக்குப் 'புரிகிறது'.......

கடைக்காரனிடம் காசு கொடுக்கும் போது அவன் என் விரல்களைத் தொட்டபடி வாங்குகிறான்.

வாயை மூடிக் கொண்டு வருகிறேன். கடைக்காரனைப் பகைத்துக் கொள்ள முடியுமா ?

கேட்டால் மட்டும் என்ன சொல்லுவான் ?

www.tamilarangam.net

என்ன நடந்தது இப்ப. காசு குடுக்கும் போது கைவிரல் பட்டு விட்டது அவ்வளவு தானே. "

மிஞ்சிப் போனால்,

" நீ என்ன பெரிய ய ய சிறி தேவியா. . நீயும் உன்ர மூஞ்சியும். . த்த் தூ. . என்பான் "

றோட்டால் போகிறேன்..

ஒருவன் என்னையே உச்சந் தலையில இருந்து உள்ளங்கால் வரை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அவனது பார்வையில் அசிங்கம் இருப்பது தெரிகிறது.

வகுப்பறையில் முன் வரிசையில் நாங்கள் நான்கு பெண்கள் அமர்ந்திருக்கிறோம்.

விஞ்ஞான ஆசிரியன் எங்களைப் பார்த்த படி பெண்ணுடலைப் பற்றி ஆபாசமாக வர்ணித்துக் கொண்டிருக்கிறான்.

ஆண் மாணவர்கள் பலத்த சத்தமாகச் சிரிக்கின்றனர்.. .

நாங்கள் கூனிக் குறுகி அமர்ந்திருக்கிறோம்.

அவனது வாயை அடக்கும் விதமாய் நான்கு வார்த்தை தானும்

சொல்லாமல்.

ஆசிரியர். . .. . . அவனைப் பகைத்துக் கொண்டு நான் எப்படி படிப்பது ?

படித்தால் தானே பரீட்சையில் பாஸ் பண்ணி. .யூனிவேர்சிட்டி. பட்டம். உத்தியோகம். திருமணம்.

என்மீது மிக மிக அக்கறை கொண்டிருப்பதாய் காட்டிக் கொள்ளும் நண்பனுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன்

எதேச்சையாய படுவதுபோல இடிக்கிறான். அதைப் புரிந்து கொண்டு அவனுடன் சேர்ந்து நானும் நடிக்கிறேன் , அவனை அவன் கண்ணியத்தை நம்புவதாய்.

வாடகை கொடுக்கும் போது வீட்டுக்காரன் என் தந்தையிடம் முறையிடுகிறான்.

' உங்கள் மகள் கூடுதலாக தண்ணீர் பாவிக்கிறாள்' என்று.

அவனுக்கு எப்பிடித் தெரியும் நான் கூடுதலாக தண்ணீர் பாவிப்பது. ?

மறைப்பு இல்லாத குழாயடியில் நின்று நான் குளிப்பதை அவன் பார்க்கிறான்.

பார்க்காதே என்று அவனுடன் சண்டை பிடிக்க முடியாது.

வீட்டை விட்டு போகச் சொன்னால் வேறு வீடு பார்க்கும் வசதி எனது தந்தைக்கு இல்லை.

" பாக்கிறானா .. . " என்று பயந்தபடி சுற்றிச் சுற்றி பார்த்துக் கொண்டே குளிக்க வேண்டி இருக்கிறது.

பஸ் தரிப்பில் நிற்கிறேன்.

முன்னால் பிரமாண்டான விளம்பரப் பலகை.

நீச்சல் உடையில் பருத்த தொடைகளைக் காட்டியபடி ஒரு பெண் ரயறின் மேல் அமர்ந்து இருக்கிறாள்.

அருகில் நின்றவன் விளம்பர பெண்ணை வெறித்துப் பார்த்து விட்டு என்னையும் பார்த்தான்

எனக்கு சங்கடமாயிருந்தது.

கட்டாயம் அரைகுறை ஆடையில் இளம் பெண் தான் விளம்பரத்திற்கு வர வேண்டுமா என்ன ?

ஏன் சிறு குழந்தை ஒன்று அல்லது வயோதிப மாது ஒரு ஆண் வரக் கூடாது ?

www.tamilarangam.net

விளம்பரம் பண்டத்திற்கா அல்லது பிண்டத்திற்கா ?

கோவிலைச் சுற்றி கும்பிட்டபடி

வருகிறேன்.

பருத்த மார்புகளை முன்னால் தள்ளியபடி அம்மணமாய் பெண் தெய்வங்கள்.

பின்னால் சில ஆண்கள் . . . . . கைகள் மாத்திரம் கும்பிட்ட படி இருக்க அவற்றையே முறைத்துப் பார்த்த படி ' தெய்வ தரிசனம் ' செய்து கொண்டு வந்தார்கள்.

பண்டைத் தமிழர் பெருமை கூறும் பாரம்பரிய கலைச் சின்னங்கள்களாம். .. .....

கலை என்றால் ஏன் பெண்களின் அங்கங்கள் மாத்திரம் உருப் பெருப்பித்து வடிக்கப்படுகின்றன ?

அம்மணத்தில் தான் கலை இருக்கிறது என்றால் ஏன் ஒரு ஆண் தெய்வம் கூட உருப் பெருப்பித்த ஆண் அங்கங்களுடன் அம்மணமாய் இல்லை ?

பெண்ணின் நிர்வாணத்தில் தான் கலை இருக்கிறதா ?

அதை மாத்திரம் தான் கலைக் கண்ணால் பார்க்க முடியும் என்றால் பார்ப்பவர் கண்ணில் இருப்பது உண்மையில் கலைப் பார்வையா ?

பெண் என்பவள் ஒரு பாலியல் நுகர்வுப் பண்டம்.

பெண் உடல் என்பது பாலியல் உணர்வுக்கான ஒரு குறியீடு மாத்திரமே.

இதுதான் சமூகத்தின் பெண்ணைப் பற்றிய கண்ணோட்டம்.

" பெண் என்பவள் ஆணின் இச்சை தீர்க்கும் பண்டம்; ஆணின் பார்வைக்கும், பேச்சுக்கும், சிரிப்பிற்கும், உணர்ச்சிக்கும் பலியாக வேண்டியவள்; அவள் அதற்காகவே தான் பிறந்திருக்கிறாள். அது அப்படித் தான் இருக்க வேண்டும்

இப்படித் தான் சமூகம் பெண்ணைப் பார்க்கிறது.

இந்த சமூகத்தை பொறுத்த வரையில் பெண் என்பவள் ஆணிற்கான ஒரு பண்டாகத்தான் கருதப்படுகிறாளே அன்றி தனக்கென ஆளுமையுடைய மனித ஜீவியாக அல்ல.

சமூகத்தில் ஆணுடன் கூட்டு வாழ்க்கை நடத்தும் பெண் தனது வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கைகளின் போதும், தான் வாழ்வதற்காக மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலின் போதும் ஆணுக்கு ஏதோ ஒரு விதத்தில் தன்னை பலியாக்க வேண்டி வருகிறது.

ஆண் தன்னை சுரண்டுவதை, தன்னை சூறையாடுவதை கண்டும் காணாமல் சகித்துப் போக

நேரிடுகிறது.

உடலைக் காசுக்காக விற்பதை மாத்திரம் விபச்சாரம் என்றால் , சமூக ரீதியான செயற்பாடுகளின் போது பெண் ஆணால் உடல் ரீதியாக சுரண்டப்படுவதை, தனது உடல் அத்து மீறப்படுவதை -- மனதால் விரும்பாமலே -- அனுமதித்துச் செல்வது அதுவும் ஒருவித விபச்சாரம் தான்.

இந்த சமூக அமைப்பில் பெண் ஆனவள் ஒவ்வொரு கணமும் ஆணால் அத்துமீறப் படுகிறாள்.

ஆனால் சமூகமோ அதைக் கண்டும் காணாமலேயே இருந்து விடுகிறது.

பெண்ணின் அவலம் என்பது இங்கு தான் ; இதில் தான் புதைந்தி ருக்கிறது.

www.tamilarangam.net

பெண்ணை ஒரு பாலியல் நுகர் பண்டமாக ஆண் கருதுவது மாறாதவரை அதை சமூகம் எதிர்க்காதவரை பெண் இந்த அவலத்தை சமூக ரீதியாக சுமக்க நேர்கிறது.

ஆணுக்கு பலியாக நேர்கிறது. ஒவ்வொரு கணமும் ஆணுடன் விபச்சாரம் செய்ய நேர்கிறது.

இந்த இலட்சணத்தில் ' கற்புடைய தமிழ் சமூகம் ' கண்ணகியினதும், மாதவியினதும் ' கற்பைப் ' பரீட்சிப்பதில் காலத்தைப் போக்குகிறது.

நிலம் பார்த்து நடக்கும் பண்டையத் தமிழ் பெண்ணைப் பற்றிய கேடு கெட்ட கதையை கூறிக் கூறியே இன்றைய காலத்துப் பெண்ணை தொடர்ந்தும் ஆணுக்குப் பலியாக்கப் பார்க்கிறது.

யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் 'அப்பழுக்கற்ற ஒழுக்கமுடைய' ஒரு சமூகமாய் தன்னைக் கற்பனை செய்து கொள்வதில் திருப்தி அடைகிறது.

அது மாத்திரமல்ல, அந்த கற்பனையில் சஞ்சரித்தபடி ஏனைய சமூகங்களின் கலாச்சார பழக்க வழக்கங்களுக்கு 'கண்ணாடி மாளிகையில் இருந்து' கல்லெறியவும் செய்கிறது.

என்று இந்த கண்ணாடி மாளிகை நொறுங்கப் போகிறதோ. ......

பாவம். . . .' கற்புடைய தமிட் சமூகம்'

## உன் கடிதத்திற்கு ....

மரணங்களே நிதர்சனமாகிப் போன
என் தேசத்திலே
மன அமைதியை மறந்து
மரண பயம் அச்சுறுத்த
வாழ்ந்து வரும் மக்களுடன்
இருக்கும் எனக்கு
உனது கடிதம்
வேடிக்கையாகியது.

குருவிகள் கூட இப்போ
கூடுகளில் நிம்மதியாய்
உறங்குவதில்லை
குடியிருப்புக்கள் இழந்து
அகதி முகாம்களிலே
அடுக்கிய மூட்டைகள் போல்
அல்லுறும் எம் மக்களின் நடுவே
உன் கடிதம் எனக்கு வேடிக்கையாகியது

வீடு வளவுடன்
காணி உறுதியையும்
மறக்காது எழுதி வரும்படி
தெளிவாய் தெரிவதற்காய் - நீ
தீட்டி எழுதிய பந்தியிலே - உன்
தெளிவற்ற நிலையினை
தெரிந்து கொள்ள வைத்த
உன் கடிதம்
எனக்கு வேடிக்கையாகியது.

சந்தையிலே பார்த்தவிழ்க்கும்
மந்தியல்ல நான்
சராசரி மனிதனாக வாழ நினைக்கும்
பெண்ணாகவே உள்ளேன்
இந் நிலையை நீ ஏற்றால்
இணைந்து வாழ நான் தயார்.

**ஜெகன்**

www.tamilarangam.net

# பெண்கள் சுயக்கட்டுப்பாட்டை இழந்தவர்களா ?

## சமர்

1993 மாசி, பங்குனியில் வெளியாகிய சக்தி இதழில் '**கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்விடுதலையின் பிரிக்க முடியாத ஒரு அம்சம்**' என்ற தலைப்பில் அகல்யா ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

இக்கட்டுரை சமர் 5, 6 இல் வெளியாகிய கருக்கலைப்புத் தொடர்பான ஒரு விடயத்தை ஒட்டிய விமர்சனமாகவே வெளிவந்துள்ளது.

இவ் விமர்சனத்தில் வெளியாகிய பல விடயங்களுக்கு சமர் 7 இல், சரிநிகரில் வெளியாகிய கருக்கலைப்பு தொடர்பான விமர்சனத்திற்கான பதிலில் எமது நிலையை தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்நிலையில் இக்கட்டுரையில் எழுதப்பட்ட புதிய விடயங்களை விவாதிக்கிறோம்.

குறித்த கட்டுரை 5,6 இல் வெளியாகிய கருக்கலைப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்திற்கு அப்பால் கற்பனையில் சமர் பற்றிய நினைப்புடன் புதிய விடயங்களையும் சமர் மீது கூறி விவாதித்தும் உள்ளனர்.

நாம் கருக்கலைப்புடன் சுட்டி காட்டிய விடயங்களை விவாதிக்கத் தவறியதுடன், அவை போன்ற விடயங்களை வேண்டும் என்று விட்டு விடுகின்றனர்.

சமர் குறிப்பிட்ட படி பொருளாதார, வீட்டுப் பிரச்சனைக்காக குழந்தையைக் கொல்வது என்பதை வேண்டுமென்றே விவாதிக்கத் தவறினர்.

கருக்கலைப்புக்கான பல காரணங்களையும் ஆய்வுக்கு எடுத்து விவாதிக்க முன் வராமையின் ஊடாக, இப்பிரச்சனையை பெண்விடுதலையுடன் முடிச்சுப் போட்டு பிரச்சனையை திசை திருப்பியும் உள்ளனர்.

அத்துடன் சமரை பழமைவாதிகள் என குறிப்பிட்டதுடன், ஒரு குடும்பத்தில் அத்துமீறி தலையிட்டதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மேலும் முற்போக்கு பிரிவினர் மத்தியிலும் கூட ஆணாதிக்க கருத்துக்கள் பலமாக உள்ளதாக குறிப்பிட்டதுடன் சர்வதேச அளவில் நடைபெறும் விவாதங்களை கூர்மையாக அவதானிக்கும்படி ஒரு மேதாவித்தனத்துடன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச அளவில் நடைபெறும் விவாதத்தில் பங்குகொள்ளும் அகல்யா எம்மைக் கூர்ந்து அவதானிக்க கோரியவர் அவ் விவாதங்கள் என்ன? யார் ? எங்கே ? எதையும் சொல்லாமல் விட்டதன் ஊடாக ' சர்வதேச விவாதம்' என்பதை வெறும் விவாதத்திற்கான வார்த்தையாக வெளிப்படுத்தியுள்ளார்.

எமக்கு அரசியல் முதிர்ச்சியின்மை, அரசியல் நாகரீகம் தெரியாமல் உழறுவதாக அரசியல் முதிர்ச்சி கொண்ட அகல்யா கூற்றை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

நாம் அரசியல் முதிர்ச்சி அற்றவர்தான். நாம் இச் சமூகத்திடமிருந்து கற்றுக் கொள்ள நிறையவே உள்ளது.

நாம் கற்றுக் கொள்ள விரும்புவதை அகல்யாவிற்கு சுட்டிக்காட்ட விரும்புவதுடன் எமக்கு உங்கள் அரசியல் முதிர்ச்சியுடன் நாம் விவாதிக்க முற்படும் விடயங்களை விட்டு விடாமல் அரசியலுடன் விவாதிக்க கோருகிறோம்.

குறித்த கருக்கொலை எம்முன் வந்தபோது நாம் அது பற்றி எதுவும் தெரிந்து கொண்டிருக்க வில்லை.

www.tamilarangam.net

எமது அரசியலுடன் முரண்பட்டவர்களும், சில பெண்களும் இது தொடர்பாக விவாதிக்க முற்பட்ட போதே நாம் விவாதிக்க தொடங்கினோம்.

ஆரம்பத்தில் இது தொடர்பாக கோட்பாட்டு ரீதியில் எதையும் அறிந்திருக்கவில்லை.

அதன் பின்பே நீங்கள் குறிப்பிட்ட பழமைவாதக் கோட்பாட்டில் இருந்தே இன்றைய நிலையை வந்தடைந்தோம்.

நீங்கள் குறிப்பிடும் பழமைவாதம் என்பது மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோவின் கோட்பாடுகளையே.

இவர்களின் பழமைவாதக் கோட்டுப்பாட்டிற்கு அப்பால் புதிய கோட்பாட்டை வைக்க முடியாதவர்கள், பழைய கோட்பாடு என்று கூறி நிராகரிப்பது மத்தியதர வர்க்க பிரிவினரின் இயலாமையின் வெளிப்பாடே.

உங்களுடைய விவாதம், எம்முடைய விவாதமும் இரண்டும் வேறு வேறு ஆன சமூக அமைப்புத் தொடர்பானதே.

எமது விவாதம் ஒரு புரட்சியையும், புதிய சமூக அமைப்பை உருவாக்குவது பற்றியுமே.

உங்கள் விவாதம் இச் சமூக அமைப்புக்குள் ஒரு தீர்வை நாடி நிற்பதே.

இவைகளை ஒட்டி நாம் ஒவ்வொரு விடயமாக ஆராய்வோம்.

அயர்லாந்தில் நடைபெற்ற விடயம் அடிப்படையில் பலாத்காரமானது.

பலாத்காரமாக உருவாகும் கருவை **அழிப்பதை சமர் 7 இல் நாம் தெளிவு** படுத்தியுள்ளோம்.

நீங்கள் எடுத்த இவ் உதாரணம் முதலாளித்துவ அமைப்பிலும், நீதிமன்றத்திலும் எழுப்பப்பட்ட பிரச்சனையையும், அதற்கான தீர்வையுமே.

இது போன்று ஒரு சோசலிச அமைப்பில் நிகழும் போது அங்கு இயல்பாக அழிப்பதற்கு சமூகம் ஏற்று இருக்கும்.

முன்பு ஒடுக்கப்பட்ட மக்கள் வென்றெடுத்த உரிமை அழிக்க முனையும் இவ் ஏகாதிபத்தியங்கள் பிரச்சனைக்கு கருஅழிப்பை குறிப்பிட்டது என்பது இடைச்செருகலே.

இதை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் முன்னைய சோசலிச நாடுகளுடன் ஒப்பிட்டுப் பொருத்தியிருந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்று எடுத்த உரிமை என்பது முதலாளித்துவத்திற்கு உள்ளான சில சலுகைகளே.

இவை ஒரு சமூகமாற்றமாகி விடாது.
சோசலிச நாடுகளில் ஒரு சமூக மாற்றமாகவே பரிணமித்தது.

இவ்விரு சமூக அமைப்பிலும் இப்பிரச்சனை வேறுபட்டதாக இருந்தது.

முதலாளித்துவ நாடுகளில் கருஅழிப்பை ஏற்கும், எதிர்க்கும் சக்திகளின் கோரிக்கைகளை ஆராயுமிடத்து அவர்களுக்கு இடையே வேறுபாடுக உள்ளது.

அங்கு புரட்சிக்காக போராடும் இடதுசாரிகள் இப்பிரச்சனையை சமூக மாற்றத்துடன் கையாண்டனர்.

அவர்களின் நோக்கு ஆணாதிக்கத்திற்கு எதிரானது.

சமூக மறு உற்பத்தியுடன்

www.tamilarangam.net

சம்பந்தப்பட்டதை ஏற்றதுடன், அதை ஒரு உயிர்க் கொலையாகவும், கலாச்சார சீரழிவாகவும் இனங் காட்டுகின்றனர்.

இவ்விடயத்தை ஏகாதிபத்தியம் தனது போக்கில் எவ்வாறு கையாளுகின்றனர் என புரிய வைத்தனர்.

கருக்கலைப்பை எதிர்த்த மதவாதிகள் ஒரு புரட்சி நடைபெறாமல் தடுப்பதற்கு அடிப்படையாகக் கொண்டே கோருகின்றனர்.

இச் சமூகமானது சீரழிவு முதலாளித்துவத்தை சமயத்தின் ஊடாகவும் பேணப்படுவதாலும், சமயம் இதை உயிர்க் கொலையாக வரையறுத்து இருப்பதாலும் எழுந்த கோரிக்கையே.

இன்னுமொரு முதலாளித்துவ பிரிவினர் இதை கலாச்சாரம், பண்பாட்டிற்கு எதிரானது என சொல்லி இச் சமூக அமைப்பை பாதுகாக்கவும், கரு சுமப்பதைக் காரணமாக வைத்து பெண்களை வேலையை விட்டு நீக்கவும், புதிய கவர்ச்சியான பெண்களை வேலைக்கு அமர்த்தவும் அடிப்படையாக வைத்து எழுவதே. இப்படிப்பல.

இதை ஆதரிப்பவர்கள் பெண்களின் கவர்ச்சி கெட்டுவிடாமல் இருக்கவும், தமது போகப் பொருளாக பெண்களை பாவிக்கும் (ஆணாதிக்க வெளிப்பாடாக ) நோக்கிலும், சமூக சீரழிவை அங்கீகரிக்கவும், ( தவறான குடும்ப உறவுகளை ), அரசியல் நோக்காகவும், (கிளிங்டன கோரிக்கை ) அமைவதே. இப்படிப் பல.

கிளிங்டன் கருஅழிப்பு மட்டுமல்ல ஓர் இனச்சேர்க்கையையும் வைத்தே வென்றார்.

உதாரணமாக எடுத்த அகல்யா இவைகளை முற்போக்கு விடயமாகப் பார்க்கிறார்.

இது சமுதாயச் சீரழிவை மேலும் அதிகரித்து சுரண்டலை நிலைநாட்ட எடுக்கப்படும் நடவடிக்கையே .

கரு பிரச்சனையை பெண்களின் உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனை எனில் விபச்சாரம் கூட பெண்ணின் உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனைதான்.

அந்த வகையில் விபச்சாரம் வேண்டாம் என யாரும் கோர முடியாது. ஏன் எனில் அது பெண் உடல் சம்பந்தப் பட்டது.

இது போன்று குழந்தைக்குப் பால் கொடுப்பது பெண்ணின் உடல் சம்பந்தப்பட்டதே.

உடல் அழகு கெட்டு விடும் என சொல்லி இன்று பால் கொடுக்க மறுக்கும் பெண்களின் நிலையை என்ன என்பது.

இதை எல்லாம் பெண் விடுதலை (உடல் சம்பந்தப்பட்டது) என சொல்லி உண்மையில் பெண் விடுதலையை சரியாக சிந்திக்காமல் சீரழிவைக் கோருவதே.

"கர்ப்பம் என்பது ஒரு ஆணைப் பொறுத்தவரையில் ஒரு கண நேர சுகாநுபத்தின் விளைபொருளே.

இதன் ஊடாக ஆண் தனது ஆண்மையை உலகறியச் செய்வதாக " சொன்ன கட்டுரையாளர் பெண் விடுதலை தொடர்பான தனது தவறான வாதத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சுக அநுபவம் என்பது ஆண் மட்டும் விரும்பிப் பெற்றுக் கொள்வது இல்லை.

அங்கு பெண்ணும் விரும்பிப் பெற்றுக் கொள்வதே. இது இருவருக்கும் பொருந்தும்.

www.tamilarangam.net

இதைப் பற்றி மெளனம் சாதித்ததுடன் ' ஆண்மையை ' உலகிற்குப் பறை சாற்றுவதாக

கூறி தனது ஆண் எதிர்ப்பு வாதத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆண் எதிர்ப்பு என்பது அடிப்படையில் ஆணாதிக்க சமுதாயத்தை மாற்றுவது என்பதற்கு எதிரானது.

இது சமூக மாற்றக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டது.

கருவை சுமப்பது, ஆண்மையை பெற்று இருப்பது என்பது ( மனித உருவாக்கத்தில் ) பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடே.

இதை ஆண் பெண்களை ஒடுக்க உருவாக்கியதாக கருதும் இப் பெண்ணிலைவாதியின் கருத்து வெறும் ஆண் எதிர்ப்புடன் கூடிய வெற்றுக் கோசங்களே.

ஆண், பெண்ணுக்கு இடையிலான வேறுபாடும், விளைவுகளும் இசைவாக்கத்திற்கு உள்ளானதே.

இதை பெண்விடுதலையுடன் முடிச்சு போட்டு சரியான பெண்விடுதலையை திசை திருப்பும் செயற்பாடே.

இன்று மேற்கு நாடுகளில் கருக்கலைப்பை முன்னெடுத்துள்ள பெண்ணிலை அமைப்புக்கள் பற்றி ஆராய்வோம்.

இவர்கள் இடதுசாரிகள் என்று தம்மை தாம் கூறிக் கொண்ட போதும் இவர்கள் உண்மையில் இடதுசாரிகள் அல்ல.

சோவியத்தில் குருசேவின் முதலாளித்துவ மீட்புடன் எப்படி கம்யூனிஸ்ட்டுக்கள் என தம்மைதாம் கூறிக் கொண்டு முதலாளித்துவத்தை மீட்டார்களோ அது போன்றே இவர்களின் இடதுசாரித்தனமும், பெண்விடுதலையும்.

இப் பெண்நிலைவாதிகள் இச்சமூகத்தில் எத்தனையோ பிரச்சனைகள் இருக்க அதாவது அரசு ஒடுக்குமுறை, பெண் உழைப்பு ஆணாதிக்க சமூகம் ஏற்றுக் கொள்ளமை. . . போன்ற பிரச்சனைகளுக்கு எதிராகப் போராட தகுதி யிழந்து , அரசுடன் பிரச்சனை ஏற்படாத ( இச் சமூக அமைப்பை மாற்றிவிடாத ) போராட்டம் ஒன்றை முன்னெடுத்து தமது சமரச் சீரழிவை வெளிக்காட்டி வருகின்றனர்.

இதற்கு மாறாக உள்ள பெண்கள் அமைப்புக்கள் சமூக மாற்றத்தை தமது பிரதான கோரிக்கையாகக் கொண்டு அதற்கு ஊடாக இவ் ஆணாதிக்க சமூகத்தை மாற்ற முனைகின்றனர்.

" பெண் கருவைச் சுமப்பதால்

உடல்- உள ஆரோக்கியத்தை மட்டுமின்றி சமூக நடவடிக்கையில் இருந்து துண்டித்து விடும் நிகழ்வாக உள்ளது " என வாதிட்டு " பெண்ணே இதை அழிக்கும் உரிமை வேண்டும் " என கோரியுள்ளார்.

பெண்ணின் உயிருக்கு ஆபத்தாக இருக்கும் குழந்தையை அழிப்பதை ஏற்கும் நாம் உடல்- உள ஆரோக்கியம் என்ற விடயம் அதற்குள் அடங்கி விடுகிறது.

உளவியல் ரீதியான பிரச்சனை இச் சமூக அமைப்பிலுள்ள பல்வேறுபட்ட முரண்பாடுகளின் வெளிப்பாடே.

சமூக மாற்றத்திற்காக இச் சமூகத்திற்கு எதிராக போராடுவதினூடாகவே வெற்றி கொள்ள முடியும்.

சமூக நடவடிக்கையை தடுத்துவிடும் என்ற வாதம் இச் சமூக அமைப்பிற்கு எதிராக போராடாமையில் இருந்து எழுந்ததே.

www.tamilarangam.net

இதை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் " பிரசவ கால விடுமுறைகள், முறையான தாய்- சேய் பராமரிப்புக்களை வழங்குதல், மேலதிக கொடுப்பனவுகள், வீட்டு வேலைகளில் ஆண்களின் முறையான பங்களிப்பு போன்றவை கிடைப்பதில்லை எனக் குறிப்பிட்டார்"

ஒரு சமூக இயக்கத்தில் இயங்க முடியாது தடுக்கும் இது போன்றும் இதற்கு மேற்பட்ட விடயங்களை வெற்றி கொள்ள கருவை அழிப்பதற்குப் பதில் ஆணாதிக்க சமூகத்திற்கு எதிராக போராடி சமூக மாற்றத்தை பெற வேண்டும்.

இதை மறுக்கும் வெளிப்பாடே அகல்யா போன்றோரின் கோரிக்கை மட்டுமன்றி மேற்கத்தைய சீரழிவு இடதுசாரி பெண்கள் அமைப்பின் கோரிக்கையும்.

சமூகமாற்றத்தை நோக்கி வரும் நபர்கள் தொடர்பாகவும், அதை நோக்கி வென்றெடுக்கும் சக்திகள் தொடர்பாகவும், சமூகமாற்றத்தின் பின் மொத்த மொத்த சமூகம் தொடர்பாகவுமே.

சமூக மாற்றத்தை விரும்பாத சக்திகள் ( இச் சமூகத்தை ஏற்றுக் கொள்பவர்கள் ) மீது நாம் எந்த தீர்வையும் வைத்துவிட முடியாது.

ஏனெனில் அவர்கள் ஆணாதிக்க சமூக அமைப்பை ஏற்றவர்களே.

நீங்கள் ஆணாதிக்க சமூகத்தைத் தகர்க்க போராட முன்வரும் அதே நேரம், அதற்கான தீர்வையும் உயர்த்திப் பிடிக்க கோருகின்றோம்.

மாறாக இந்த ஆணாதிக்க சமூகத்திற்காக ஒரு தீர்விற்காக போராடுவதும், அதனால் கருவை அழிக்க கோருவதும் இச் சமூக அமைப்புக்குள்ளான சமரசமே.

" இனப்பெருக்கம் என்பது சமூக மறுஉற்பத்தியுடன் சம்பந்தப்பட்டது என்பதால் சமூகத்திடமே முடிவு இருக்கவேண்டும்.

அப்படியாயின் ஆணாதிக்க சமூகத்தின் ஆதிக்க நிலையா ? " என கோரும் கட்டுரையாளர் பிரச்சனையாக உள்ளது.

இவ் ஆணாதிக்க அமைப்புத்தான் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

சமூகம் ஏற்க முடியும் ஆனால் அது ஆணாதிக்க சமூகமாக இருக்க தேவையில்லை என்பதையே.

இதில் எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள பிரச்சனை இச் சமூக அமைப்புத் தொடர்பானதே.

நாம் விவாதிப்பது சமூகமாற்றத்திலாடும், சமூகமாற்றத்தின் பின்பும் உள்ள சமூகம் பற்றியதும்.

" கர்ப்பம், பிரசவம் என்பது பெண்ணின் உடல் சம்பந்தப்பட்ட சொந்த உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனை" என தொடர்ந்து வாதிட முயலும் இக்கட்டுரையாளர் தொடர்ந்து குழந்தை உருவாக்கம், பெண்ணின் வளர்ச்சி, உயர்ச்சிகளை ஏற்படுத்துவதுடன் உடல், உள ஆரோக்கியங்களை பணயம் வைக்கும் நிகழ்வாகவும் வாதிட்டுள்ளார்.

இவ்வாதத்தை ஏற்றுக் கொள்ளின் உலகில் முற்றாக மனித இனம் அழிந்துவிடும்.

இங்கு பிரச்சனை இந்த நிகழ்முறைக்கு எதிராக போராடி சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதே.

உங்கள் வாதத்தில் உள்ள

உழைப்பின் வளர்ச்சி என்பது இவ் ஆணாதிக்க சமூக அமைப்பு உழைப்பை அங்கீகரித்தல் தொடர்பானதே.

www.tamilarangam.net

உழைப்பை இச் சமூக அமைப்பு அங்கீகரிக்க வேண்டின் இச் சமூக அமைப்பு மாற்றப்பட வேண்டும்.

சமூகமாற்றத்திற்காக போராடுவதே ஒழிய கருவை அழிப்பது அல்ல.

கரு உடல் சம்பந்தப்பட்டது உண்மையே.

கரு என்பது இன்னுமொரு உயிர். ஒரு உயிரை சுமக்கும் உடல் என்பதால் அதை கொன்றுவிடும் உரிமை அவ் உடலுக்கு கிடையாது.

உயிரை சுமக்கும் நிகழ்வு பரிணாமத்தின் வெளிப்பாடே.

பெண்ணின் உடலில் பாதிப்பு ஏற்படின் வைத்தியரின் ஆலோசனை மட்டும் தீர்வாக இருக்க முடியுமே ஒழிய பெண்ணின் ஆலோசனை சம்பந்தப்பட்டதல்ல.

"விஞ்ஞான வளர்ச்சி கருவை அழித்தல், சுமத்தல் என்ற நிகழ்வை இலகுபடுத்தியுள்ளது " என வாதிடும் இவர் அழித்தல் என்பதன் ஊடாக விஞ்ஞானத்தை தவறாக வழிநடத்தக் கோருகிறார்.

உதாரணமாக அணு உருவாக்கம் ஆக்கவும், அழிக்கவும் முடியும்.

இங்கு அழித்தல் என்பது விஞ்ஞானத்தை தவறாக கையாள்வதின் வெளிப்பாடே.

இதே போன்றே கருவை அழித்தல் என்பது விஞ்ஞானத்தை தவறாக வழிநடத்த கோருவதே.

இவ்விஞ்ஞான வளர்ச்சியின் தேவையை தவறாக கோருவதினூடாக சமுதாயத்தை அழிவுக்கு வித்திடும் நோக்கிலானதே.

"ஆணாதிக்க சமூகம் பெண்ணின் உடலும் உடலில் உள்ள செயற்பாடுகளும் பெண்ணை அடக்குவதற்குப் பயன்படுவதாக "கூறியவர் மேலும் அவளது உயிரியல் அம்சங்கள் காரணமாக இயற்கையிலேயே கீழ்ப்பட்டவளாக இருக்க போதிக்கின்றது எனக் கூறியுள்ளார்.

ஒரு பெண் தன்னை ஒரு ஆணுடன் இணைக்கும் போது நிச்சயமாக ஒரு பெண் முழுமையாக சுதந்திரம் கொண்டு இருக்க வேண்டும்.

இங்கு இது கணவன் எனினும் பொருந்தும். இங்கு எந்த விதத்திலும் பலாத்காரம் என்ற பேச்சிற்கே இடமிருக்கக் கூடாது.

பலாத்காரம் என்பது அடிப்படையில் தவறானது.

நாம் இங்கு விவாதிப்பது பெண்ணின் பூரண விருப்பத்துடன் ஒரு ஆணுடன் இணைந்த பின் உருவாகும் குழந்தை தொடர்பானதே.

அப்படி உருவாகும் குழந்தை பலாத்காரத்தில் உருவாகவில்லை.

இவ் நிகழ்வுகளின் பின் ஆண்சரி, பெண்சரி முடிவு எடுக்க முடியாது.

அது குழந்தையின் உயிர் சம்பந்தப்பட்ட விடயமாக மாறிவிடுகிறது.

அந்த வகையில் இது பெண்ணின் உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனையல்ல.

பெண்ணின் சொந்த உடல் சம்பந்தப்பட்டது எனில் இன்று பழமைவாதத்திற்கு எதிராக பெண்கள் (உங்களைப்போன்றோர்) குழந்தைக்குப் பால் கொடுப்பதை நிறுத்துகின்றனர்.

பால் கொடுப்பது உடல் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டுமின்றி , அழகு கெட்டு விடும் என்பதாலும் இச் சமூக

www.tamilarangam.net

இயக்கத்தில் பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.

இதனூடாக ஒரு குழந்தையின் ஆரோக்கியமான வாழ்வை மறுப்பதுடன் குழந்தையின் உயிருக்கே ஆபத்துக்களையும் (கருவை அழிப்பது போல் ) ஏற்படுத்தி விடுகின்றனர்.

உடல் சம்பந்தப்பட்டது எனக் கூறி பெண் விடுதலையுடன் முடிச்சுப் போட்டு கருவை அழிப்பது,

குழந்தைக்குப் பால் கொடுக்க மறுப்பது,

விபச்சாரத்தை அங்கீகரிக்கக் கோருவது எல்லாம் ஒடுக்கப்பட்ட பெண்கள் வென்றெடுத்த

உரிமையல்ல.

இவை எல்லாம் பெண்விடுதலை எனக் கூறிக் கொண்டு ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்கக் கோரும் கலாச்சார சீரழிவுகளே.

பெண்ணின் உடலுறவின் முன்பு பெண்ணின் உரிமை பிரச்சனையாக உள்ள விடயம், விருப்பத்துடனான உடலுறவின் பின் குழந்தையின் உயிர்ப் பிரச்சனையாக மாறிவிடுகிறது.

இரண்டையும் போட்டு ஒன்றாக்கி கருத்தை திணிக்க முயல்வது அடிப்படையில் தவறானது.

அதுபோல் விருப்பதுடன் நடப்பதும், பலாத்காரத்துடன் நடப்பதும் இரு வேறுபட்ட விடயங்களே.

நாம் சமர் 7 இல் குறிப்பிட்டட போல்

1. பலாத்காரத்தின் மூலம் உருவாகும் குழந்தையை அழிக்கலாம்.

2. குழந்தை குறைபாடு உடையதாக இருந்தால்,

தாய் நோயுற்று இருநதால்,

தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படின்

வைத்தியரின் ஆலோசனையுடன் மட்டும் குழந்தையை அழிக்கலாம்.

இதற்கு அப்பால் சமூக முரண்பாட்டின் விளைவுகளால் உருவாகும் எக்காரணத்தாலும் குழந்தையைக் கொல்லும் உரிமை இவ் ஆணாதிக்க சமூகத்திற்கோ பெண்ணுக்கோ கிடையாது.

" பெண் தனது சொந்த உடல், உடலியற் செயற்பாடுகள் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ளாதவரை,

அவர் பாலியல் நுகர் பண்டமாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் உள்ளனர் " என வாதிடும் இவர் உடல் கட்டுப்பாட்டை பெற வேண்டும் எனின் பெண்கள் தமது உடல் மீது கட்டுப்பாடு அற்றவர்கள் என வாதிட்டுள்ளார்.

உண்மையில் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் சுயகட்டுப்பாடு உடையவர்களே.
இல்லை எனின் வரையறையற்ற காட்டுமிராண்டி சமூகமே இன்று இருக்கும்.

உதாரணமாக மிருகங்கள் கூட சுயகட்டுப்பாட்டை ( தமது உடல் மீது கட்டுப்பாட்டை ) கொண்டுள்ளன.

மனிதன் சுயகட்டுபாடு அற்றவர்கள் என மறுக்கும் ( உதாரணாக சக்தி இதழில் வெளிவந்த காற்றிலேறியில் வரும் பெண்ணின் உடலுறவும், அதை ஏற்றுக் கொள்பவர்களும் ) நபர்களே பின் கருவை அழிக்கக் கோருகின்றனர்.

சுய கட்டுப்பாட்டை உடைய பெண் (ஆண் அடங்கும் ) விரும்பும் பட்சத்தில் உடலுறவு கொள்ளின் அது பெண் தனது கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ளாதவன் என்ற வாதத்தை இல்லாமல் ஆக்கி விடுகிறது.

www.tamilarangam.net

இங்கு பெண்ணை மீறி ( உடல் கட்டுப்பாட்டை மீறி ) பலாத்காரமாக நடப்பின் அது தனியானது.

இது தொடர்பாக நாம் மேலே விவாதித்துள்ளோம்.

தனது உடல் மீதான (சுயகட்டுப்பாட்டுடன் ) கட்டுப்பாட்டுடன் தான் விரும்பும் ஆணுடன் உடல் உறவு கொள்ளும் போது அப் பெண்ணும் இணைந்தே பாலியல் நுகர்வை பெறுகின்றனர்.

இதனூடாக குழந்தை உருவாகின் அதை அழிக்கும் உரிமை அப் பெண்ணிற்கோ, ஆணுக்கோ கிடையாது.

பாலியல் நுகர்வை இருவரும் பெறும் போது குழந்தை உருவாகுவதை விரும்பாத பட்சத்தில் கருத்தடையை பயன்படுத்த முடியும்.

குருசேவுக்கு முந்திய சோசலிச நாடுகளில் கரு அழிப்பு தடை செய்யப்பட்டே இருந்தது.

அதற்குப் பின்பு கரு அழிப்பதை அங்கீகரித்தது என்பது சோசலிசத்தை தகர்க்கும் நோக்கில் முதலாளித்துவ சீரழிவை உருவாக்கவே.

மூன்றாம் உலக நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் உள்ள சீரழிந்த பெண்கள் அமைப்புக்கள் கோரும் கரு அழிப்புச் சுதந்திரம் என்பது அடிப்படையில் பெண்களின் சரியான போராட்டம் உருவாகி, அதனால் முதலாளித்துவம் நொருங்காமல் பாதுகாக்கும் நோக்கில் சுய கட்டுப்பாட்டை இழந்த பெண்கள் போராட்டத்தை திசை திருப்ப முயல்கின்றனர்.

" பெண்ணின் உடலியற் செயற்பாடுகளான பாலுறவு, கர்ப்பம் போன்றவற்றில் சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவப் போராடி முன்னாள் சோசலிச நாடுகள், மேற்கு நாடுகள், மூன்றாம் உலக நாடுகளில் வென்று எடுத்த உரிமை என " குறிப்பிட்டு உள்ளார்.

ஒரு பெண் சொந்தக் கட்டுப்பாட்டை (சுய கட்டுப்பாட்டை ) ஒருக்காலும் போராடி பெற்றது கிடையாது.

அது ஒவ்வொரு பெண்ணுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் ஏன் மிருகங்களுக்கே நீண்ட வாழ்வில் ஏற்பட்ட போராட்டத்தினூடாக சுயகட்டுப்பாட்டை பெற்றுள்ளனர்.

இவ்வாதத்தில் சோசலிச நாடுகளில் பெற்ற உரிமை என்பது அடிப்படையில் எதை ?

அண்மையில் BBC யில் வெளியான சில நேரடி உரையாடல் ஒன்றில் பம்பாய் நகர ஆஸ்பத்திரி ஒன்றில் பெண்கள் மகப் பெறுக்கான நிலையில் வைத்தியரை அணுகி என்ன குழந்தை என அறிய முயன்றனர்.

வைத்தியர் பரிசோதனையின் பின் பெண் குழந்தை என சொன்னவுடன் கருவை அழிக்க கோருகின்றனர்.

குறித்த வைத்தியர் கூறினார்.
ஒரு மாதத்தில் 10 ஆயிரம் குழந்தைகள் அழிக்கப்படுகிறது என்று.

இங்கு ஆணாதிக்க சமூகம் பெண் என்ற ஒரு காரணத்தால் கொல்லக் கோருவதை என்னவென்பது.
இதை அழித்து விடுவதால் பெண் விடுதலை பெற்று விடுகிறார்களா ?

www.tamilarangam.net

சீனாவில் ஒரு வருடத்தில் பிறந்த பின் (கருவில் இதைவிட கூட ) கொல்லப்படும் பத்து லட்சம் குழந்தைகளின் அழிவால் பெண் சுதந்திரம் அடைந்து விடுகிறாளா ? இவை பெண்ணின் உரிமையா ?

கருவை சுமக்கும் தாய் சொந்த விருப்பத்துடன் (சுய கட்டுப்பாட்டுடன்) உருவாக்கியதுவே.
இதைக் கொல்வது பெண் என்ற ஒரு காரணத்தால் ஆயின் இதை பெண் உரிமை என வாதிட்டால் இது பெண்கள் போராட வேண்டும் என்ற உணர்வை மழுங்கடிக்கவே.

சரியான பெண் அமைப்புகள் உருவாகுவதை குரல் கொடுப்பதை திசை திருப்ப இதற்கு தீர்வாக கருவை அழிக்க கோருகின்றனர்.

' ஏன் எதிர்க்கிறார்கள் ' என்ற தலைப்பில் குடும்பம், இனப்பெருக்கம், பாலுறவு ஆண்களுக்கு சாதகமாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இதில் ஒரு பக்கம் தவிர மீதி உண்மையாக இருந்தாலும் இதற்கு எதிராகப் போராடுவதே ஒரே தீர்வு.

இதற்கு மாறாக கருவை அழிப்பது என மட்டும் குறுக்கி பிரச்சனையை திசை திருப்ப முயல்வது ஏன் ?

கருவை அழிப்பதனூடாக குடும்பம், இனப்பெருக்கம், பாலுறவில் பெண் சுதந்திரத்தைப் பெற்று விடுவாளா ?

ஆணாதிக்க சமூகத்தை (சமூக மாற்றத்தை ) மாற்றி விடமுடியுமா ?

இதற்கு அப்பால் பெண்ணின் உழைப்பு மதிக்கப்படாமையும், முதலாளித்துவ உற்பத்தி உறவு மூலம் இரட்டை சுரண்டலுக்கு ஆளாவதற்கு எதிராக போராட வேண்டும்.
இதனூடாக மட்டுமே பெண் எதிர் நோக்கும் அனைத்து பிரச்சனைக்கும் தீர்வை பெற முடியும்.

மனிதாபிமான தொடர்பாக விவாதித்த இப் பெண் பிறக்கப் போகும் குழந்தைக்குப் பதில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்ணின் உடலையும் உடற் செயற்பாட்டையும் கட்டுப்படுத்தும் உரிமை பற்றி குரல் கொடுத்துள்ளார்.

உடலையும், உடற் செயற்பாட்டையும் கட்டுப்படுத்தும் குழந்தை மீது வெறுப்படைந்து குழந்தையைக் கொல்லக் கோரும் இவரின் பெண்விடுதலைக் கோசங்கள் அடிப்படையில் சீரழிவை நியாயப் படுத்தவே.

பெண்ணின் உயிர் பற்றி விவாதத்தினூடாக குழந்தை உயிரற்ற ஜடமாக உள்ளதாக விவாதிக்க முற்படுகிறார்.

இவை இரண்டுமே உயிர்தான். ஆணாதிக்க சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் பெண்களை பாதிக்கப்படும் போது அதற்கு எதிராக போராட வேண்டுமே ஒழிய கருவைக் கொன்று விடுவதால் தீர்வை பெற்றுவிட முடியாது.

கொன்று விடுவதே தீர்வு எனில் இச் சமூக அமைப்புக்கள் சில ஆத்ம திருப்திக்காக செய்யும் இந் நடவடிக்கை அடிப்படையில் சமரசமே.

இரண்டு உயிரையும் மதித்து ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராட வேண்டும்.

குழந்தையைக் காப்பாற்ற தமது உரிமையை விட்டுக் கொடுத்தே உருவாக்க வேண்டும் என வாதிட்டும் உள்ளார்.

பெண் தனது உரிமையை விட்டுக் கொடுத்தே தனது விருப்பத்துடன் உறவு கொண்ட பின் உருவாகிய குழந்தையை அழிக்கும் உரிமை கிடையாது.

www.tamilarangam.net

அது போல் ஆணுக்கு அக் குழந்தையை அழிக்கும் உரிமை கிடையாது. அக் கரு உயிரியல் வளர்ச்சிப்படி ஒரு உயிராக மாறிவிடுகிறது.

இங்கு வெளிப்படும் ஆணாதிக்க வெளிப்பாட்டுக்கு எதிராகப் போராட வேண்டுமே ஒழிய சமரசத்தை ( குழந்தையை கொல்வது ) நாடுவதற்கு ஊடாக ஒருக்காலும் பெண்விடுதலையை அடைய முடியாது.

குழந்தையை அழித்து உடல் ரீதியில் சுதந்திரம் அடையும் பெண் விடுதலையை பெற்று விடுவாளா ?

இதைவிட முற்றிலும் சிரிப்புக்கு இடமானது ஏதுமில்லை. மீண்டும் ஒருமுறை பெண் தனது உரிமை இழந்து கருவை கொல்வதே தொடரும்.

மூன்றாம் உலக நாடுகளில் பிரசவ மரணங்கள் மிக அதிகம் என வாதிட்ட இவர் பெண் வேண்டாத கருவை பலவந்தமாக திணிக்கிறது என வாதிட்டுள்ளார்.

பிரசு மரணங்கள் அதிகம் உண்மை தான்.

அதற்காக வேண்டாக் கருவை அழிப்பது எனில் மூன்றாம் உலக நாடுகளில் பிள்ளை பெறக் கூடாது எனவும் வாதிடுகிறார்.

இதனூடாக மருத்து வசதி மிகக் குறைவாக பெறும் அல்லது பெறாத வறிய மக்கள் பிள்ளை பெறுவதை தடை செய்யவும் கோருகின்றார்.

இக் கருத்துப்படவே மேற்கு நாடுகள் கருத்துக் கொண்டுள்ளன. இன்று வெள்ளையர் அல்லாதோரின் சனத்தொகை அதிகரிப்பும், வெள்ளையரின் சனத்தொகை வளர்ச்சியன்மையும் வெள்ளையர் அழிந்து விடுவார்கள் எனவும் அஞ்சுகின்றனர்.

இதன் வெளிப்பாடே மேற்கு நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் கரு அழிப்பை அமுல் செய்யக் கோரும் அதே நேரம் தமது நாட்டில் அதற்குத் தடையும் விதித்துள்ளனர். இதன் வெளிப்பாடு. ஆகவே இங்கு குழந்தை பெறின் உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்கின்றனர்.

பிரசவ மரணம் கூட எனில் அங்குள்ள மருத்துவக் குறைபாடுகளே.

அதற்கு எதிராகப் போராடி சிறந்த மருத்துவத்தைப் பெற முயல வேண்டும்.

போராடுவதற்குப் பதில் குழந்தையைக் கொல்வது என்பது

தீர்வாகாது.

குழந்தையைக் கொன்று விடுவதால் மருத்துவம் சீர்ப் பட்டு விடுமா ?

இவருடைய வாதங்கள் அரசியலின்றி நடைமுறையில் உள்ள பிரச்சனைக்கு சமரசம் செய்ய முயலும் இவரின் வாதங்கள் இவரின் கட்டுரைக்கு எதிராகவே மாறி விடுகின்றது.

அடிமை உடமை சமூதாயத்தில் மட்டுமே அடிமை தனது உடலின் மீது, உடற் செயற்பாட்டின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு இருக்க வில்லை என்ற வாதம் இவரின் முன்னைய கூற்றிற்கு முரண்பட்டது.

அடிமை உடமை சமுதாயத்தில் கட்டுப்பாட்டைக் கொண்டு இருக்க வில்லை எனக் கூறுவதனூடாக இன்று கட்டுப்பாட்டைக் கொண்டு உள்ளதாகக் கூறியுள்ளார்.

ஆனால் முந்தை வாதங்கள் கட்டுப்பாடு இல்லை என வாதாடி தனது கருத்தை நியாயப்படுத்த முயன்றுள்ளார்.

www.tamilarangam.net

கட்டுப்பாட்டை அடிமை உடமை சமுதயம் கொண்டிருக்கவில்லை என்ற வாதமே அடிப்படையில் தவறானது.

அங்கு அடிமைகள் தமது உடல் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு இருந்தனர்.

இதற்கு எதிராக அங்கு பலாத்காரமே செலுத்தப்பட்டது.

அவர்கள் அதற்கு எதிராகப் போராடினார்கள்.
அடிமை சமூகத்திற்கு முன் பெண்கள் தலைமை தாங்கிய சமூகத்திலும் பெண்கள் சுய கட்டுப்பாட்டைக் கொண்டு இருந்தனர்.

அவள் விரும்பியே குழந்தை பெற்றாள்.

ஆணாதிக்கம் தகர்ந்த பின் குழந்தை உருவாகும் போதும் அங்கும் மருத்துவ், சமூக நடவடிக்கையில் தடை. .. . என எல்லாம் ஏற்படும்.
இதை எப்படி தடுப்பது ? குழந்தையைக் கொல்வதனூடாகவா ?

பிறக்கப் போகும் உரிமை என கருதின் பருவம் அடைந்த ஆண், பெண் தமது கருவளம் உள்ளவரை குழந்தையை உற்பத்தி செய்து குவிப்தில் தான் முடியும் என வாதிட்ட இவர் தொடர்ந்து இவர் கருத்தடையை எதிர்ப்பவர்களையும்

சுட்டிக் காட்டியிருந்தார்.

ஆண், பெண்ணின் விந்துக்கள் இணைந்த பின்பே அது குழந்தையாக மாறும். அதற்கு முன் அது குழந்தையல்ல. இது குழந்தைக்கு மட்டுமல்ல எந்த உற்பத்தியிலும் பொருந்தும்.

குறித்த மூலப் பொருட்கள் இணையும் போது மட்டுமே ஒரு பொருள் உருவாகிறது.

உதாரணமாக வெடி குண்டு உருவாகின் எல்லா மூலப் பொருட்களும் இணையும் போது மட்டுமே வெடி குண்டு வெடிக்கும். அதற்கு முன்பு அதன் மூலப் பொருள் வேறு ஒரு பண்பைக் கொண்டிருக்கும். இதுபோல் அனைத்து உற்பத்தியும்.

கருத்தடை பயன்படுத்தப்படும் நிகழ்வு என்பது இரண்டு விந்துக்களும் இணைய விடாது தடுப்பதில்தான் பங்கு ஆற்றுகிறது.

இதற்கு மாறாக ஆண் பெண் விந்துக்களை தனித்தனியாக குழந்தையாகப் பார்த்தால் மட்டுமே மனிதாபிமானம் என வாதிட முடியும்.

இரண்டு விந்துக்களும் இணைய முன்பு அவை குழந்தைக்கான பண்பைப் பெற்று இருப்பதில்லை. இங்கு மனிதாபிமானம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

தேவைப்படும் மட்டும் கருத்தடையை நிறுத்தி குழந்தை (தீயணைக்கும் கருவி போல் , கிரணைட்டு போல் ) பெற்றுக் கொள்ளலாம்.

இவைகளை விட்டு விட்டு சுயகட்டுப்பாடு அற்றவர்கள் கண்மூடித்தனமாக வாழ்வதும் பின்பு கருவை அழிக்க முயல்வதும் சமூகச் சீரழிவே.

கலாச்சார சீரழிவு பற்றிக் குறிப்பிட்ட அவர் இதை கருத்தடை, விவாகரத்திற்கும் எதிராக எழுப்ப முடியும் என கூறி தனது கருத்தை நியாயப் படுத்த முயல்கிறார்.

கலாச்சார சீரழிவு என்பது பல்வேறுபட்ட விளைவுகளால் உருவாகுதே.
போராட்டத்தை திசை திருப்ப அரசுகளால் மறைமுகமாக அமுல் செய்யப் படுபவைதான்.

www.tamilarangam.net

குறித்த கலாச்சார சீரழிவில் உருவாகும் குழந்தையையும் வேறுவிதமாக உருவாகும் குழந்தையையும் கொல்வதால் கலாச்சாரம் சீர்ப்பட்டு விடாது.

சீரழிந்த கலாச்சாரத்திற்குப் பதில் புதிய கலாச்சாரத்தை உருவாக்கப் போராட வேண்டுமே ஒழிய கலாச்சார சீரழிவை அங்கீகரிக்கும் நோக்கில் குழந்தையைக் கொல்ல முடியாது.

விவாகரத்து என்பது உயிரைக் கொல்வது தொடர்பானது அல்ல. இரண்டு நபர்கள் வாழ்வது தொடர்பானது. இது எல்லா நாடுகளிலும், எல்லா நேரத்திலும் சரியாகக் கையாளப்படுவதும் இல்லை.

கருத்தடை என்பது ஒரு குழந்தை உருவாக்கம் தொடர்பானதே. இது கூட கலாச்சார சீரழிவாகப் பயன்படுத்தப் படுகிறது.

இது இன்றுள்ள முதலாளித்துவக் கட்டமைப்புக்குள் சீரழிவை ஊக்குவிக்கும் வகையில் தவறாகப் பயன்படுத்தப்படும் அதே நேரம் மற்றொரு பிரிவினரால் சரியாகவும் கையாளப்படுகின்றது.

" ஒடுக்கப்பட்ட பெண்கள் 'சமர்' 'மனிதம் ' போன்ற சஞ்சிகைகளிடம் பெண்விடுதலை தொடர்பான மேலெழுந்த வாரியான கருத்தை அல்ல. கருக்கலைப்பு போன்ற முக்கிய விடயங்களைப் பற்றிய புரட்சிகரமான நிலையைக் கோருவதாகக் கேட்டிருந்தார்.

எமது கடந்த கால வாதம் மேலெழுந்த வாரியானது எனில் உங்கள் வாதம் ஆழமானது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

உங்கள் ஆழமான வாதப்படி கரு அழிப்பை ஏற்றுக் கொண்டால் பெண் விடுதலை பெற்றுவிடுவாளா?

கரு அழிக்க எனக் கூறும் காரணங்கள் ஆக பொருளாதாரம், வீட்டுப் பிரச்சனை, அழகு வேண்டும், வேலை இழக்க நேரிடும், சமூக வாழ்வில் ஈடுபட முடியாது, சிறந்த பிரசவ வசதியில்லை, உடல் சுதந்திரம் வேண்டும், தற்செயலாக ஏற்பட்ட கரு, சீரழிவு நடவடிக்கையில் உருவான கரு,

போகங்களில் ஈடுபடும் போது உண்டான கரு, சுய கட்டுப்பாட்டை இழந்து உருவான கரு, விபச்சாரத்தின் மூலம் உருவான கரு,. . .இவை எல்லாவற்றிற்கும் குழந்தையைக் கொல்வது தீர்வல்ல.
மாறாக போராட வேண்டும்.

கொல்வதால் மேற் குறிப்பிட்ட விடயங்களில் பெண் தீர்வைப் பெற்று விடுகிறார்களா ?

எமது விவாதங்கள் மேலும் செழுமையாகவும், ஆழமாகவும் விவாதிக்க வேண்டும் என்பதை மீண்டும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

எமது விவாதம் அடிப்படையை தொட்டு நின்றது என்பதை மீண்டும் சுட்டிக் காட்டும் அதே நேரம் ஆழமான பார்வை கொண்டுள்ளதாக சொல்லும் நீங்கள் எங்கள் கருத்துக்களை ஒவ்வொரு வரியாக( விட்டு விடாமல் ) அரசியலுடன் விவாதிக்க கோருகிறோம்.

எமது கருத்தை எடுத்து விமர்சித்து எப்படி என சொல்லியிருக்க வேண்டும். இத விடுத்து பெண்விடுதலை கரு அழிப்பு எனக் கூறியது மட்டுமின்றி உடல் ரீதியாக விடுதலை அடைவதையே பெண்விடுதலை எனக் கூறி அதற்காகக் குரல் கொடுத்தது என்பது பெண்விடுதலை அல்ல.

மாறாக ஐரோப்பாவில் ஒரு பகுதிப் பெண்களின் கோரிக்கையாக பெண்கள் கவர்ச்சியாக இருக்க கோருவது ஆகும்.

www.tamilarangam.net

இன்று கரு அழிப்பு குறிப்பாக மத்தியதர மேல்தட்டுப் பிரிவினரின் கோரிக்கை மட்டுமின்றி சீரழிவுக் கோரிக்கையாகும்.

இதற்கு மாறாக பெண்விடுதலை பெற போராடுவதனூடாக உழைப்புக்கான மதிப்பைப் பெறுவதனூடாக பெண்ணின் அனைத்துப் பிரச்சனையும் தீர்க்க முடியும்.

பெண்ணின் உணர்வுகளை ஆண்களால் புரிந்து கொள்ள முடியாது என்ற வாதத்தினூடாக ஆண்கள் பெண்விடுதலை தொடர்பாக வெளிவிடும் கருத்துக்களை தடுப்பது என்ற அடிப்படையில் சரியான கருத்துக்களை கண்டு அஞ்சுவதன் வெளிப்பாடே.

ஆண்கள் தவறாக கருத்து கூறின் அதை விமர்சிப்பதுடன் கருத்தை வர வேற்க வேண்டும்.

ஆண்களால் புரிந்து கொள்ள முடியாது எனக் கூறி நிராகரிப்பது அடிப்படையில் தமது கருத்து தவறானது என்ற நிலையில் இருந்து எழுவதே.

ஒரு மனிதனின் பிரச்சனைகளை கேட்டு அறிந்து கொள்வதினூடாகவே வழிகாட்ட முடியும்.

இதை ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருந்து அறிந்து கொள்வதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தலைமை தாங்க முடியும். இதைத்தான் நீண்ட காலப் போராட்டங்கள் உலகிற்கு பல சந்தர்ப்பங்களில் உணர்த்தியுள்ளது.

## கூண்டுப் பறவைகள்

சரிவாய் இறங்கும் மலைமேல்
உருண்டு புரளும் முகில்களுடன்
நர்த்தனம் பயிலும்
இறப்பர் மரங்களெல்லாம்
பனித்தூவலில் முகம் கழுவும் வேளை.

தொலைவில் லயங்களில்
இன்னும் இருள் மூடியே. . .
ஒருவித பரபரப்புடன்
நகரும் லாந்தர்கள்.

கிணற்றடியில்
நடுங்கும் கரங்களால்
பல் துலக்கும்
பள்ளிச் சிறுவன் !
நித்திரை முறியாமலே
பிள்ளை மடுவத்திற்கு
எடுத்துச் செல்லப்படும்
பால்குடி !
பணிவிடை முடித்து
தம் மீது அழுந்தும் பனியை
உதறியபடி
தோட்டத்திற்கு விரையும் பெண் !

இவை எல்லாவற்றையும் விட
கங்காணி மகன் வளர்க்கும்
பறவை
பாலருந்தா செய்தியே
பரபரப்பாய். .

பிள்ளை மடுவத்தில்
தாய் முகம் அறியாது மிரளும்
பச்சிளம் குழந்தை. .
அவசர அவசரமாய்ச் சென்றும்
பள்ளியில்
அடிவாங்கும் சிறுவன். .
பனியில் குளிக்கும்
பெண் இயந்திரம். . .
எல்லாமே
பாசப்பிணைப்புக்களற்ற
போலி வாழ்க்கையாய். . .
ஓ. . .! கூண்டுப் பறவைகள்.

**ஆகர்ஷ்யா.**

www.tamilarangam.net

## பிரசுரமாகும் ஓர் கடிதம்.

ஈரப்பலாவும் தென்னைகளும்
சோலையாய் மூடிக்கிடந்த
தெற்குக் கிராமம் !
பெயரிலே தொனித்த முரட்டுத்தனத்தை
அந்தக் கிராமம்
கொன்று போட்டிருந்தது.

காற்றின் இழுப்பிலே
சருகுகள்
என்னை முந்திச் செல்லும்.
சினிமாப் பாடலை முணுமுணுத்தபடி
நடந்து போவேன்
உரத்து தமிழில் கத்துவேன்
அப்போதெல்லாம்
அந்த ஊர்
எனக்கு அந்நியமாக இல்லை.

பரீட்சை நெருங்கும் போது
படிப்பு அமளியும்
மீத் நாட்களில்
கதையும் சிரிப்புமென
எங்கள் அறை கலகலத்திருக்கும்
பல்கலைக்கழகமும் அறையுமாக
எமது பொழுதுகள்
ஊசலாடும்.
அந்தக் கிராமத்தின் நிழலிலே
எம் வாழ்வை
இயந்திரமாய் உணரவேயில்லை.

மிலானி !
பெயரைப்போலவே நீயும்
இனிமையானவள்
உன் வீட்டில்
வாடகைக்கு இருந்த அந்த நாட்கள்
இப்போது
என்னை மாணவனாக்கிப் பார்கக்கும்.
' சாயா' என்ற குரலும்
கதவிலே உனது தட்டலும்
கேட்டே
எமக்குப் பல பொழுதுகள் விடிந்திருக்கின்றன.
தலைமயிரை விரல்களால் துடைத்து
ஒரு சேட் இனையும் மாட்டி
வருவதற்குள்
உனது குரல் மீண்டும் கேட்கும்
இப்போ நீ
எனது பெயரை மட்டுமே சொல்லி
கதவில் தட்டுவாய்
கணீர் என்ற உனது குரல்
ஒவ்வொரு தடவையும்
என் இதயத்தில் ஏறும்.

என்னை காணும் போதெல்லாம்
நீயும் உனது அம்மாவும்
ஏதோ கதைப்பதும் சிரிப்பதுமாய் இருக்க
எல்லாம் புரிந்தது போல் நானும்
கொச்சை சிங்களத்தில் பேசி
சிரித்து சமாளிப்பேன்.
அப்போதும்
என் இதயத்தில் அடித்துக் கொள்ளும்

அந்த உணர்வுகளை
என்னுள் புதைத்தேன் !
நீயும் நானும்
வாழ்வில் இணைவதாய்
எழும் மனத்திரை ஓவியம்
திடீரென ஏதோ ஒன்றில் அதிர்ந்து
இருண்டு போகும்.
நானும் தனிமையாகிவிடுவேன்.
நீயும் தான் !

83 யூலை கலவரம்
என்னை கப்பலேற்றி அனுப்பியது
உன்னை பிரிந்தேன்
உனது கிராமத்தை பிரிந்தேன்
அந்த நினைவுகள்
இதயத்தை நெருடுகின்றன.
நான் முன்னரைப் போல இல்லை மிலானி !
நீயும் நானும் இணைவதை
இப்போ
என் வீட்டார் மட்டுமல்ல
ஆயுதங்களும் அனுமதிக்காது என்ற போதும்
என் உணர்வுகளை
புதைத்து வைக்க
என்னால் முடிவதில்லை
இருந்தும் என்ன
காலம்
எமக்காக காத்து நிற்கவில்லை
அந்த மென்மையான உணர்வுகள் மட்டுமே
என்னோடு வாழ்கின்றன.

மிலானி !
எனக்கு இப்போ தெரிகிறது
அடக்கி வைப்பதால்
மனித உணர்வுகள் அழிந்து போவதில்லை
என்பது மட்டுமல்ல
காலத்தைக் கைப்பற்ற வேண்டும்
என்பதும்தான் !

**பாலமோகன்**

www.tamilarangam.net

# சமரின் விமர்சனத்திற்கான பதில் -- அகல்யா.

தமது குழு அங்கத்தவர் ஒருவரது தனிப்பட்ட ஒரு செயற்பாடு தொடர்பாகவே தாம் தமது கருத்தை தெரிவித்த தாகவும், நான் அதை வலிந்து ஒரு பெண்விடுதலைப் பிரச்சனையாக்கி, அவர்கள் கூறாத கருத்துக்களை எல்லாம் கற்பனை செய்து விமர்சித்து இருப்பதாகவும் சமர் கூறுகிறது.

சமரைப் பொறுத்தவரையில் கருக்கலைப்புத் தொடர்பான இந்த பிரச்சனை அவர்களது குழுவிலுள்ள ஒருவரது தனிப்பட்ட செயற்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இருக்கலாம்.

ஆனால் அதனை தமது பத்திரிகை மூலம் வெளிக் கொணர்ந்த பின்பு அது பொது அரங்கிற்கு வந்து விடுகிறது.

அத்தோடு கருக்கலைப்பு என்பது பெண் விடுதலைப் போராட்டத்தின் நீண்ட கால போர்க் களங்களில் ஒன்று என்பதை சமர் அறியாது இருக்கலாம். அது எனது தவறல்லவே.

இவ் விதமாக பெண்விடுதலையுடன் தொடர்புடைய ஒரு முக்கிய விடயம் தொடர்பாக சமர் இவ்வாறு பொறுப்பற்ற விதமாக தவறான கருத்துக்களை வெளியிடும் போது அதனை முகம் கொடுப்பது பெண் விடுதலையுடன் அக்கறையுடைய ஒவ்வொருவரது கடமையுமாகும்.

இதனால் தான் சக்தி மாத்திரமன்றி ஏனைய பத்திரிகைகளும் இது தொடர்பாக கருத்துக்களை முன் வைத்தன.

பெண் விடுதலையில் அக்கறையுடையவள் என்ற விதத்தில் நான் ' சமர் ' முன் வைத்த கருத்துக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு வரிக்கு வரி மறுக்க முனையாமல் கருக்கலைப்பு என்ற பிரச்சனையை அதற்குரிய தளத்தில் வைத்து அது தொடர்பாக எழக் கூடிய அனைத்து வாதப் பிரதி வாதங்களையும் கருத்திற்கெடுத்தே எனது கருத்தினை முன் வைத்திருந்தேன்.

இது தொடர்பாக விமர்சிக்கும் சமர் தாம் பொருளாதாரம் மற்றும் வீட்டு வசதிக் காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்வது தொடர்பாக பேசி இருப்பதாகவும், மாறாக நான் அந்த விடயங்களையே தொடாமல் ஏதேதோ பேசிச் செல்வதாகவும் குற்றஞ் சாட்டுகிறது.

இது தொடர்பாக எனது நிலைப்பாடு இதுதான்.

நான் தான் கருக்கலைப்புச் சுதந்திரத்தை பெண்விடுதலையின் பிரிக்க முடியாத ஒரு கூறாகக் கருதி அதனை நிபந்தனையின்றி

அங்கீகரிக்குமாறு வற்புறுத்துகிறேனே.

அவ்வாறு நிபந்தனையின்றி அங்கீகரிப்பதானது பொருளாதாரம் மற்றும் வீட்டுப் பிரச்சனைகளையும் உள்ளடக்கியது தான் என்பதை ஏன் சமரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கருக்கலைப்பு பற்றிய பிரச்சனையில் இறங்கு முன்பு கருக்கலைப்புத் தொடர்பான விவாதங்களை அறியாது இருந்திருக்கலாம்.

www.tamilarangam.net

ஆனால் கருக்கலைப்புத் தொடர்பான எதிர்த் தரப்புக் கருத்துக்கள் வந்த பின்பு அவற்றை முறையாக பரிசீலித்து தனது தவறான நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

பொதுவாக பெண்விடுதலை தொடர்பான கருத்துக்களே தமிழ் சமூகத்தில் விரிவாக பரப்பப் படாத நிலையில் கருக்கலைப்பு போன்ற ஒரு உணர்வுகளைத் தொடக் கூடிய ஒரு விடயத்தை எடுத்து விவாதிப்பதிலுள்ள சிக்கல்களை, சிரமங்களை நான் அறியாமலில்லை.

சாதாரண நிலைமைகளில் இது போன்ற விடயங்களை எடுத்த எடுப்பிலேயே முன் வைப்பதை நான் தவிர்க்கவே விரும்பினேன்.

ஆயினும் சமர் தனது கருத்துக்களை முன் வைத்த பின்பு கருக்கலைப்புத் தொடர்பாக நான் பேசுவதை தள்ளிப் போட முடியாத நிலைமை உருவாகி விடவே எனது கருத்துக்களை முன் வைக்க நேர்ந்தது.

கருக்கலைப்புத் தொடர்பான எனது கருத்துக்களை முன் வைத்த போது அந்தக் கட்டுரையில் நான் ஆண்மை/ பெண்மை பிரிவினை (gender) குடும்பம், பாலுறவு, பெண்கள் தமது உடலின் மீது தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ளுதல் போன்ற பல விடயங்கள் பற்றியும் பேச நேர்ந்தது.

இந்த விடயங்களை விளங்கிக் கொள்வதற்கு எந்த விதமான சிரமத்தையும் சமர் எடுத்துக் கொள்ளாது சாதாரண பொது நிலையிலேய புரிந்து கொண்டு தனது விமர்சனத்தை முன் வைத்திருக்கிறது.

இதனால் இவர்கள் எனது கருத்தை சரியாகப் புரிந்து கொள்ளவேயில்லை என்பது தெரிகிறது. ஆதலால் நான் எடுத்தாண்ட விடயங்கள் பற்றி விரிவான விளக்கங்களை முன் வைப்பது அவசியமாகிறது.

ஆனால் அப்படிப்பட்ட விரிவான

விளக்கத்தை முன் வைக்க இந்த பதிலில் போதிய இடமும், அவகாசமும் கிடைக்காது என்பதால் இந்த விடயங்கள் ஒவ்வொன்று தொடர்பான விரிவான விளக்கங்களை முன்வைப்பதை எதிர்காலத்தில் தொடர்ந்தும் மேற் கொள்வேன்.

இப்போது எனது நிலைப்பாடுகள் பற்றி சுருக்கமாக. . .

**மார்க்சிசம், லெனினிசம் பற்றி...**

தம்மை மார்க்சிஸ்ட்-லெனிஸ்ட்டுக்களாக இனங் காட்டும் சமர் என்னை மார்க்சிய விரோதியாக சித்தரிக்க முனைகிறது. இது தவறானது.

நான் மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாகப் பார்க்கிறேன்.

அந்த வகையில் உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களது விமோசனத்திற்கான ஒரு ஆதர்சமாகவே மார்க்சிசம் திகழ்கிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

எந்த ஒரு சமூகப் பிரச்சனைக்கும் முகம் கொடுத்து தீர்வு காணும் ஆற்றல் இந்த விஞ்ஞானத்திற்கு உண்டு.

இதற்கு மாறாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோரது படைப்புக்கள் மாத்திரமே மார்க்சியம் என்று குறுக்க முனையும் சமர் மார்க்சியத்தை ஒரு சில வரட்டுச் சூத்திரங்களாக மாற்றி விடுகிறது.

எனவே சமருக்கும் எனக்கும் மார்க்சியம் தொடர்பாக உள்ள முரண்பாடு மார்க்சியவாதி/ மார்க்சிய விரோதி சம்பந்தப் பட்டது அல்ல.

மாறாக மார்க்சியத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது தொடர்பானது. அதாவது மார்க்சியத்தை சில வரட்டுச் சூத்திரங்களாக குறுக்குவதா அல்லது ஒரு விஞ்ஞானமாகப் பார்ப்பதா என்பதேயாகும்.

எனது கட்டுரையில் நான் பழமைவாதிகள் என்று குறிப்பிட்டது முதலாளித்துவத்தின் conservartive பிரிவினரையே.

முதலாளித்துவ தாராண்மை வாதிகளுக்கு மாறாக இவர்கள் பல பிற்போக்கான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளார்கள்.

பிரித்தானிய conservartive கட்சியும், அமெரிக்க குடியரசுக் கட்சியும் இவர்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றன.

பழமைவாதிகள் என்று நான் மார்க்சியவாதிகளைக் குறிப்பிடுவதாக சமர் கூறுவது தவறானது.

ஆனால் நடைமுறையில் சமர் மார்க்சியத்தை சில வரட்டுச் சூத்திரங்களாக குறுக்குவதன் மூலம் மார்க்சியத்தை பழமைவாதக் கோட்பாடு போல ஆக்கி விடுவதாக எனக்குப் படுகிறது.

அதனால் தான் சமர், conservartive களுடைய நிலைப்பாடுகளை மார்க்சியத்தின் பேரால் வந்தடைய முடிகிறது.

**பெண்ணடிமைத்தனமும் பொருளாதாரமும்....**

பொருளாதாரம் என்ற ஒரே அம்சத்தின் மூலம் பெண்ணடிமைத்தனத்தை விளக்கி விட சமர் முனைகிறது.

இதனால் பெண்ணடிமைத்தனம் என்பதை வெறுமனே 'சம வேலைக்கு சம ஊதியம்' சம்பந்தப்பட்ட பிரச்சனையாக சமர் குறுக்கி விடுகிறது.

சமூக மாற்றத்துடன் இந்தப் பிரச்சனை தீர்க்கப் பட்டு விடும் என்று வாதிடுகிறது.

ஆனால் நானோ ஆணாதிக்கத்தின் ஒப்பீட்டு அளவிலான சுயாதீன தன்மையை தனித்துவமான அம்சங்களை சுட்டிக் காட்டுகிறேன்.

இந்த தனித்துவமான ஒடுக்கு முறையை எதிர்த்து தனித்துவமான போராட்டங்களின் அவசியத்தை வலியுறுத்துகிறேன்.

சோசலிசப் புரட்சியானது பெண்விடுதலைக்கு அவசியமானது என்பதை நான் மறுக்க வில்லை.

முதலாளித்துவத்தின் கீழ் பல ஆண்டுகள் போராட்டத்தின் மூலம் அடைய முடியாத பல பொருளாதார, அரசியல், சட்ட, சமத்துவங்களை புரட்சிகர அரசானது உடனடியாக வழங்கி விடும் என்பது உண்மை.

ஆனால் இந்த உரிமைகளைப் பெறுவதுடன் பெண்ணடிமைத்தனம் முற்றாக ஒழிந்து விடுவதில்லை என்பதுதான் கவனிக்க வேண்டியதாகும்.

இன்னும் பல வடிவங்களில் ஆணாதிக்கமானது சோசலிச சமூகத்திலும் தொடரும் ஆணாதிக்கத்தின் சில வடிவங்களானவை, சோசலிச சமூகமானது சட்ட ரீதியில் பெண்களுக்கு வழங்கிய சில அரசியல், சட்ட, பொருளாதார உரிமைகளை பெண்கள் பாவிப்பதற்குக் கூட தடையாக அமைந்து விடுகின்றன.

www.tamilarangam.net

சோசலிசத்தின் கீழும் ஆணாதிக்கத்தின் சில வடிவங்கள் இவ்வாறு தொடர்வதை மார்க்சியவாதிகள் பிற்போக்கு கலாச்சாரத்தின் மிச்ச சொச்சங்கள் பற்றிய பிரச்சனையாகக் கருதுகிறார்கள்.

ஆனால் பெண்ணிலைவாதிகள் இது ஆணாதிக்கத்தின் சார்பளவிலான சுயாதீன தன்மை பற்றிய பிரச்சனையாக கருதுகிறார்கள். அவற்றை சோசலிசம் தன்னளவிலேயே ஒழித்து விட மாட்டாது.

சோசலித்தால் தீர்க்கப்படக் கூடிய பெண்ணடிமைத்தனத்தின் வடிவங்கள் உண்டு. சோசலிசத்தால் மட்டுமே தீர்க்க முடியாத வடிவங்களும் உண்டு.
இப்படியான வடிவங்களுக்கு எதிராக பெண்களின் குறிப்பான போராட்டங்கள் அவசியமானவையாகும்.

பால் ஒடுக்குமுறை என்பது உலகிலுள்ள எல்லா ஒடுக்கு முறைகளுக்கும் முன்னையதாகும்.

அடுத்தடுத்து வந்த பலதரப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு இன்றுவரை பலமாக நிற்கிறது.

வரலாற்றில் உருவான பல தரப்பட்ட புரட்சிகளும் பலவிதமான ஒடுக்கு முறைகளுக்கு தீர்வு கண்டன.

ஆனால் இந்த புரட்சிகளை எல்லாம் மீறி பால் ஒடுக்குமுறையானது நிலைத்து நிற்பதுடன் இன்றைய சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்திலுள்ளும் ஊடுருவி நிற்கிறது.

பொருளாதாரம், அரசியல் சட்டம், மதம், ஏனைய சித்தாந்தங்கள் கலை இலக்கியம், விஞ்ஞானம், மருத்துவம், உளவியல், மொழி, சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்ற மரபுகள் போன்ற பல்வேறு துறைகளிலும்அரசு, இராணுவம், மதபீடம், பாடசாலை குடும்பம் போன்ற பல்வேறு நிறுவனங்களிலும் ஒழுக்க நெறி, ஆண்மை/பெண்மை அழகு போன்ற மதிப்பீடுகளிலும் பல்வேறு சிந்தனை முறைகளிலும் ஆணாதிக்கமானது மிகவும் பலமாக ஊடுருவி நிற்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.

இந்த வகையில் பால் ஒடுக்குமுறைக்குத் தீர்வு காண்பதாயின் எமது சமூகத்திலுள்ள ஒவ்வொரு துறையிலும், நிறுவனங்களிலும், மதிப்பீட்டிலும், செயற்பாட்டிலும், சிந்தனையிலும் உள்ள ஆணாதிக்க நலன்களின் குறிப்பான வடிவங்களை இனங் கண்டு அவற்றிற்கு எதிராக குறிப்பான போராட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது.

பெண் விடுதலையின் பேரால் நாம் சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை திசை திருப் முயல்வதாக சமர் குற்றஞ் சாட்டுகிறது.

பெண்விடுதலையின் பேரால் நாம் தேசிய, வர்க்க விடுதலைக்கான போராட்டங்களை கைவிடுமாறு ஒருபோதும் கோரவில்லையே.

மாறாக சமர்தான் சமூகமாற்றத்தின் பேரால் பெண்விடுதலைப் போராட்டத்தைக் கைவிடுமாறு எம்மைக் கோருகிறது.

பெண்விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்குமான உறவானது உண்மையில் தனித்துவான ஒடுக்குமுறைக்கும் பொதுவான ஒடுக்குமுறைக்கும் இடையில் இயங்கியல் உறவு பற்றிய பிரச்சனையாகும்.

www.tamilarangam.net

ஒரு புரட்சிகர தாபனமானது இந்த போராட்டங்களுக்கு இடையிலுள்ள இயங்கியல் உறவைப் புரிந்து கொண்டு இந்த போராட்டங்கள் ஒன்றை ஒன்று பலப் படுத்தும் விதத்தில் இவற்றை முறையாக இணைத்து முன்னெடுக்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் தனித்துவமான ஒடுக்கு முறைகளின் குறிப்பான தன்மைகளை இனங்காண மறுப்பதானது இந்த இயங்கியல் இணைவை தடை செய்து புரட்சிக்கு ஊறு விளைவித்து விடக் கூடியது.

இன்று நடைபெறும் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டதை எடுத்துக் கொண்டால் போராட்டத்துடன் தொடர்புபடும் பல்வேறு மக்கள் பிரிவினருக்கும் போராட்டம் தொடர்பாக பல்வேறு அக்கறைகள் இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுரண்டும் வர்க்கங்களைப் பொறுத்தவயில் தேசிய விடுதலை என்பது மட்டும் போதுானதாக இருக்கலாம்.

ஆனால் சுரண்டப்படும் வர்க்கங்களைப் பொறுத்த வரையில் இந்த தேச விடுதலையானது சுரண்டலுக்கான தீர்வையும் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அக்கறை இருக்கிறது.

அவ்வாறே ஒடுக்கப்படும் பெண்களைப் பொறுத்த வரையில் இந்த தேசிய விடுதலையானது பெண்ணடிமைத்தனத்திற்கு முடிவு கட்டுவதாவும் அமைய வேண்டும் என்பதில் அக்கறையிருக்கிறது.

இந்தவகையில்தான் ஒடுக்கப்பட்ட பெண்கள் தேசிய, வர்க்க விடுதலையுடன் கூடவே பெண்விடுதலையிலும்அக்கறை செலுத்துகிறார்கள். ஒடுக்கப்பட்ட பெண்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் நியாயமானதும், இயல்பானதுமான கோரிக்கையாகும்.

**சமரசவாதம் குறித்து . . .**

இன்று நாம் முகம் கொடுக்கும் எந்த ஒரு பிரச்சனைக்கும் நடப்பு சமூக அமைப்பிற்குள் தீர்வு காண முறைவது சமரவாதம் என்கிறது சமர்.

உண்மையிவ் இது பகுதிக் கோரிக்கை-- முழுமையான கோரிக்கை என்பவற்றிற்கு இடையிலான உறவை புரிந்து கொள்ளாததின் விளைவாகும்.

பூர்சுவா சனநாயகப் புரட்சி நிறைவு பெறாத சமூகத்திலுள்ள சோசலிஸ்ட்டுக்கள் சனநாயகக் கோரிக்கைளுக்காகப் போராடுவது அவசியமானது.

இவ்வாறே குறிப்பட்ட அந்த சமூக அமைப்பிற்குள் சாத்தியமாகக் கூடிய அரசியல் சனநாய உரிமைகளை வென்றெடுப்பதற்காக உழைக்கும் மக்கள் போராடுவது அவசியமானதே.

இந்த உரிமைகளை வென்றெடுப்பதானது சோசலிசத்தை வென்றெடுப்பதாகான உழைக்கும் மக்களின் வாய்ப்புக்களை அதிகரிக்கிறது.

இவ்வாறே சோவியத்தின் பண்ணையடிமை முறை முற்றாக ஒழிக்கப்படாத நிலையில் விவசாயிகள் தமது நிலங்களை விற்பதற்கான உரிமைக்காக போராடுவதற்கான அவசியத்தை லெனின் வலியுறுத்தினார்.

உண்மையில் இது தனியுடமையைப் பலப்படுத்தும் கோரிக்கைதான். ஆனால் இந்த சனநாயக உரிமையைப் பெறாமல் அந்த அரைப் பண்ணையடிமைகள் சோசலிசத்தைப் பற்றி சிந்திப்பது கூட சாத்தியப் பட்டிருக்காது.

www.tamilarangam.net

இந்த வகையில் நடப்பு சமூக அமைப்பினுள் முற்றிலும் சாத்தியப்படக் கூடிய தமது உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவது பெண்களின் கடமையாகும்.

இந்த உரிமைகளைப் பெறுவதன் மூலமே மேலும் விரிவான மாற்றங்கள் பற்றி சிந்திப்பதும், அவற்றிற்காகப் போராடுமாறு தம்மை இன்னும் சிறப்பாக ஒழுங்கமைப்பதும் சாத்தியப்படும்.

இந்த வகையில் பெண்களின் உரிமைக்கான பகுதிக் கோரிக்கைகள் முழுமையான சமூக மாற்றத்திற்கு அவசியமான முன் நிபந்தனைகளாகும்.

இவற்றை சமூக மாற்றத்திற்கு எதிராகப் பார்ப்பது சமரின் இயக்க மறுப்பியல் அணுகுமுறை மட்டுமல்ல, ஆணாதிக்க கண்ணோட்டமும் ஆகும்.

சோசலிசத்தில் மட்டும் நடப்பு ஒழுங்குகளினால் சலுகை அனுபவித்து வரும் ஆண்கள் பெண்களது உரிமைகளை தாமாக முன்வந்து வழங்கி விட மாட்டார்கள்.

அங்கும் கூடி பெண்கள் தாமே போராடித்தான் பல உரிமைகளை வென்றெடுக்க வேண்டி இருக்கும். எனவே இந்த நீண்ட போராட்டத்தை இப்போதே தொடங்குவதே சரியானது.

சோசலிசப் புரட்சி தவிர்ந்த ஏனைய பகுதிக் கோரிக்கைகளுக்காக போராடக் கூடாது என்றால் தேசிய ஒடுக்குமுறைக்கான போராட்டங்களையும் சாதிய ஒடுக்குமுறைக்கான போராட்டங்களையும் நாம் கைவிட வேண்டி வரும் என்பதை கவனத்திற் கொள்வது அவசியமானது.

**கருக்கலைப்பை உயிர்க் கொலை என்பது தொடர்பாக . . .**

கருக்கலைப்பை உயிர்க் கொலை என்று வாதிடும் சமர், உயிர் எவ்வாறு உருவாகிறது என்று பல உதாரணங்கள் தந்து விளக்க முனைகிறது.

விளக்கங்கள் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் சமர் ஓரிடத்தில் மட்டும் சறுக்கி விடுகிறது. அது யாதெனில், இயற்கை விஞ்ஞானத்தின் மதிப்பீடுகளும், சமூக விஞ்ஞானத்தின் மதிப்பீடுகளும் வேறு வேறானவை என்பதைக் கவனிக்கத் தவறுவதாகும்.

இயற்கை விஞ்ஞானத்தின் மதிப்பீடுகளும் சமூக விஞ்ஞானத்தின் மதிப்பீடுகளும் வேறுபட்டவை என்பதை முதலிலேயே குறித்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக சமூக மதிப்பீடுகள் என்பவை பல்வேறு சமூகப் பிரிவுகளின் நலன்களுடன் தொடர்பு பட்டவையாகவே அமைகின்றன.

குறிப்பிட்ட ஒரு சமூக நிகழ்வை பல்வேறு சமூகப் பிரிவுகள் அணுகும் போது அந்த நிகழ்வானது தமது நலன்களுடன் எப்படித் தொடர்புறுகின்றது என்று கவனிக்கின்றனவே ஒழிய இயற்கை விஞ்ஞானம் அது பற்றி என்ன கூறுகிறது என்பதைப் பற்றி அக்கறைப்படுவது கூட கிடையாது.

எனவே குறிப்பிட்ட ஒரு சமூக நிகழ்வு தொடர்பாக முரண்பட்ட மதிப்பீடுகள் எழும் போது இங்கு நாம் கவனிக்க வேண்டியது இந்த முரண்பட்ட மதிப்பீடுகளின் பின்னாலுள்ள முரண்பட்ட நலன்கள் யாவை என்பதேயன்றி இந்த நிகழ்வு பற்றி இயற்கை விஞ்ஞானம் கூறுவது என்ன என்பது பற்றியல்ல.

www.tamilarangam.net

இயற்கை விஞ்ஞானத்தின் அர்த்தத்தில் உயிர் என்பது மிகவும்விரிவான அர்த்தமுடையது.

இங்கு மனிதன் மட்டுமல்ல ஏனைய விலங்கினங்களும், தாவரங்களும், நுண்ணுயிர்களான பற்றீரியா, பங்கசு, வைரசுகளும், நோய்க் கிருமிகளும் ஏன் ஒரு அங்கியின் உடலிலுள்ள ஒவ்வொரு கலமும் உயிருள்ளவை தாம்.

இந்த வகையில் கரு மாத்திரமல்ல சூலும், விந்தும் கூட உயிருள்ளவை தாம். சரியான வாய்ப்பு வழங்கப் பட்டால் இவை கூட முழுமையாக விருத்தியுறக் கூடியவையே.

சமூக நடைமுறையில் உணவிற்காக அல்லது இன்னோரான தேவைகளுக்காக இந்த அங்கிகளைக் 'கொல்ல' நேர்கையில் சமூகப் பிரிவுகள் அதனை உயிரக் கொலையாகக் கொள்வதில்லை.

இங்கு வெவ்வேறு சமூகப் பிரிவுகள் தமக்கென வேறுபட்ட அளவுகோல்களைப் பயன்படுத்தியே உயிர் என்பதை வரையறுக்கின்றன.

எல்லா சமூகப் பிரிவுகளுமே தாவரங்களை உணவாகக் கொள்கின்றன. ஈ, எறும்பிற்குக் கூட தீங்கு விழைவிக்க கூடாது எனக் கூறும் சில மதங்கள் கூட இதனை உயிர்க் கொலையாகக் கருதுவதில்லை.

இயற்கை விஞ்ஞானத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் உயிர் என்பதை வரையறுத்து கொல்லாமையை கடைப் பிடிக்க முனைந்தால் எந்தவொரு மனிதரும் மாத்திரமல்ல விலங்குகள் கூட உயிர் வாழ முடியாது போய்விடும்.

இன்னும் சில மதங்கள் தாவரங்களை மட்டுமல்ல விலங்குகளையும் உணவாகக் கொள்வதை அனுமதிக்கின்றன. இப்படியாக பல்வேறு சமூகப் பிரிவுகள் உயிர் என்பதை வரையறுக்கும் போது வேறுபட்ட மதிப்பீடுகளை முன் வைக்கின்றன.

ஆனால் எல்லா மதங்களுமே மனிதர்களைக் கொல்வதை பொதுவாக அனுமதிப்பதில்லை. மனிதனைக் கொல்வதை பெரிய பாவமாகவே எல்லா மதங்களும் கூறுகின்றன.

ஆனால் எந்தவொரு சமூகத்திலும் தனது மத, வர்க்க, தேச எதிரிகளை அழித்தொழிப்பதை அந்த சமூகத்தின் எந்த ஒரு கோட்பாடும் பொதுவாகத் தடுப்பதில்லை. அத்தோடு அவ்வாறு செய்வது அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரது கடமை என்றும் வலியுறுத்துகின்றன.

இப்போது கருக்கலைப்பு தொடர்பான முரண்பட்ட மதிப்பீட்டின் பின்னால் முட்டி மோதும் முரண்பட்ட நலன்களை இனங்காண முயல்வோம்.

ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் ஆண்களது சந்ததிகளை பெற்றுத் தரும் சாதனங்களாகவே-- பிள்ளை பெறும் இயந்திரங்களாகவே-- உள்ளார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் தன்னால் பெண்ணின் உடலில் உருவாக்கப்பட்ட கருவானது அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆணுக்கு உள்ள அக்கறை புரிந்து கொள்ளக் கூடியதே.

ஆனால் இதற்கு மாறாக தமது உடலின் செயற்பாடுகளே தமக்கு சுதந்திரத்தைக் கட்டுப் படுத்துவதற்காக பயன்படுத்தப் படுவதைக் காணும் பெண்கள் தமது உடலின் மீதும் உடலியற் செயற்பாடுகள் மீதும் தமது பூரண கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்ள முனைகிறார்கள்.

www.tamilarangam.net

மருத்துவ ரீதியல் குணமாக்கவே முடியாது,குறுகிய காலத்துள் அவர் இறப்பது நிச்சயம் என்று மருத்துவரால் முடிவு செய்யப்பட்ட நோயாளி ஒருவர் நோயின் வேதனை தாளாது தானாக விரும்பி உயிரைப் போக்கிக் கொள்ள முன்வந்தால் அதனை அனுமதிப்பது பற்றிய விவாதம் இப்போது (மேலைநாடுகளில்) நடைபெறுகின்றன.

இந்தப் பிரச்சனை நோயால் துன்பப்படும் ஒருவரது நலன்களில் இருந்தே அணுக வேண்டும் என்பது ஒரு தரப்பாரது வாதமாகும். கொல்லாமை தீவிரமாக வலியுறுத்திய காந்தி கூட கருணைக் கொலையை ஆதரித்தாரே.

மேற்கூறப்பட்ட விபரங்கள் தெரிவிப்பது என்ன ? ஒரு குறிப்பிட்ட சமூக மதிப்பீடு தொடர்பாக முரண்பாடு எழும் போது அங்கு தேவைப்படுவது இயற்கை விஞ்ஞானத்தின் மதிப்பீடு அல்ல.

மாறாக அந்த முரண்பட்ட மதிப்பீடுகளுக்கு பின்னால் முட்டி மோதும் முரண்பட்ட நலன்களை இனங்காண வேண்டும் என்பது தானே.

இதனால் வேண்டாத கர்ப்பத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதை தமது உரிமைகளின் ஒரு பகுதியாகவே கருதுகிறார்கள்.

இந்த வகையில் பெண்களைப் பொறுத்தவரையில் கருவைக் கலைப்பதற்கான உரிமை என்பது தனது உடலின் மீது தான் நிறுவும் சொந்தக் கட்டுப்பாட்டின் ஒரு அம்சமே.

எனவே கருக்கலைப்பு தொடர்பாக முரண்பட்ட நலன்களின் பின்னால் முட்டி மோதுவது ஆணாதிக்க நலன்களும், பெண்ணின் நலன்களுமேயாகும்.

**ஆண்மை/ பெண்மை பற்றிய பிரச்சனைகள் . .. .**

ஆண்மை/ பெண்மை என்பவை இயற்கையானவை, இயல்பானவை என்கிறது சமர். இவ்வாறு கூறுவதானது, ஆண்/ பெண் என்ற உயிரில் அம்சத்திற்கும் (sex ) ஆண்மை/ பெண்மை என்ற சமூக அம்சத்திற்கும் (gender) இடையிலான வேறுபாட்டை பிரித்தறிய சமர் தவறுவதைக் காட்டுகிறது.

ஆண்/ பெண் என்ற உயிரியல் வேறுபாடுகள் பிறப்பிலேயே அமைபவை. இதனால் இயற்கையானவை, இயல்பானவை. ஆனால் இந்த உயிரியல் அம்சத்திற்கு மேலாக சமூகமானது ஆணுக்கும் பெண்ணுக்கும் என்று தனியான குணநலன்களை, ஆளுமை,சமூகப் பாத்திரங்களை கட்டமைக்கிறது.

இவ்வாறு சமூகத்தால் கட்டமைக்கப் படுபவையே ஆண்மை. பெண்மை என்பதால் குறிக்கப் படுகிறது. ஆணாதிக்க சமூகமானது ஆண்மையை துணிவு, வீரம்., அறிவுத்திறன், ஆதிக்கம் என்று வரையறுக்கிறது.

பெண்மையை அன்பு, அடக்கம், அரவணைக்கும் ஆற்றல், உணர்ச்சி வசப்படல் என்று வரையறுக்கிறது. அதாவது ஆணாதிக்க சமுதாயத்தில் நடப்பிலுள்ள ஆணின் நிலையை பலப்படுத்தும் விதத்தில் ஆண்மையானது சமூகத்தால் வடிவமைக்கப் படுகிறது.

பெண்ணின் அடிமைப்பட்ட நிலையை பலப்படுத்தும் வகையில் பெண்மையானது கட்டமைக்கப் படுகிறது. இந்த வகையில் இந்த ஆணாதிக்க சமூகம் கட்டமைக்கும் ஆண்மை/ பெண்மை என்பவை ஆணாதிக்க உறவுகளை பலப்படுத்தும் வேலைகளையே செய்து வருகின்றன.

www.tamilarangam.net

பெண்களை ஒடுக்குவதில் இவை பொருளாதார மற்றும் காரணிகளை விட சற்றும் சளைத்தவையல்ல. இதனால் இந்த ஆண்மை/ பெண்மை என்பதை பெண்ணிலைவாதிகள் எதிர்க்கிறார்கள்.

தமிழ் சமூகத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை பெண்மையாக வரையறுக்கப் பட்டுள்ளன. இவற்றின் ஒடுக்குமுறைப் பாத்திரங்களைக் கருதியே பாரதி " நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் " என்றார்.

அவ்வாறே " நிமிர்ந்த நன்னடையும்
நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம். "
என்று ஆண்மைப் பண்புகளை பெண்கள் பெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

ஆண் - பெண் சமத்துவம் நிலவும் ஒரு சமூகத்தில் ஆண்மை/ பெண்மை குணநலன்கள், சமூகப் பாத்திரங்கள் ஆளுமை வேறுபாடுகள் நிலவ முடியாது எனவும் அனைவருக்கும் பொதுவான சமத்துவமான விதத்தில் மனித ஆளுமைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் பெண்ணிலைவாதிகள் வாதிடுவர்.

எமது சமூகத்தில் இந்த ஆண்மை/ பெண்மை பண்புகள் வடிவமைக்கப்படும் விதம் இவை எமது சமூகத்தில் ஆணாதிக்கத்தைப் பலப்படுத்தும் குறிப்பான பொறிமுறைகள். இவற்றிற்கான தீர்வுகள் போன்றவற்றை பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

**அழகும் விபச்சாரமும். . .**

கருக்கலைப்பிற்கான உரிமை பற்றிக் குறிப்பிடுகையில் சமர் இதனை ' பெண்கள் தமது மார்பழகு கெட்டு விடக் கூடாது என்பதற்காக குழந்தைக்கு பால் கொடுக்க மறுப்பது' மற்றும் 'விபச்சாரம் செய்வதற்கான சுதந்திரம் என்பவற்றுடன் ஒப்பிடுகிறது'.

பெண்களது அழகு தொடர்பாக எமது சமூகத்திலுள்ள நியமங்களுடன் நான் உடன்படவில்லை என்பதை முதலிலேயே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆணாதிக்க சமூகத்தில் நிலவும் பெண்ணின் அழகு தொடர்பான மதிப்பீடுகள் பெண்களது கீழ்படிவான நிலையை மேலும் உறுதிப்படுத்தும் விதத்திலேயே அமைந்துள்ளன.

அழகு பற்றிய இன்றைய சமூக மதிப்பீட்டின் ஆணாதிக் தன்மைகளை இனங்கண்டு கொள்ளாது பெண்களே அவற்றை தமக்குரிய நியமங்களாக ஏற்றுக் கொண்டு அந்த நியமங்களை அடைவதற்கு முயற்சி செய்வது பெண்களே எவ்வளவு தூரம்ஆணாதிக் சித்தாந்தத்திற்கு பலியாகிப் போயுள்ளனர்கள் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஆணாதிக்க நியமங்களை அடைவதற்கு பெண்களே போட்டியிடுவதன் அபத்தம் கருதியே பெண்ணிலைவாதிகள் அழகுராணி போட்டிகளை எதிர்க்கிறார்கள்.

எமது சமூகத்தில் பெண்ணாகட பிறந்தவளுக்கு உள்ள ஒரே ஒரு இலட்சியம் நல்லதோர் வரனைட பெறுவதே என்றுதான கற்பிக்கப்படுகிறது.

www.tamilarangam.net

அந்த ' நல்ல வரனை' பெறுவதற்கு படிப்பு, அந்தஸ்து, சீதனம் ஆகியவை இருந்தால் மட்டும் போதாது. 'நல்ல அழகு' இருக்க வேண்டும்.

இந்த அழகு என்பதற்கான வரையறைக்குள் பருத்த, திரண்ட மார்பு என்பதும் அடங்குகிறது. இப்படியாக பெண்ணின் இலட்சியம், அவளது அழகு பற்றிய நியமம் ஆகிய அனைத்தையுமே ஆணாதிக்க சமூகமே வகுத்துக் கொடுத்த பின்பு சராசரிப் பெண் ஒருத்தி தனட மார்பழகு பற்றி கவலைப்படத் தானே செய்வாள்.

அத்தோடு திருமணத்தின் பின்பு குழந்தை பிறந்ததும் அவளது உறுப்புகள் தளர்ந்து போனதால் அழகு கெட்டு விட்ட தாகவும் பாலியல் இன்பம் திருப்தியளிக்கவில்லை என்றும் கர்ப்பத்திற்கு காரணமான கணவனே பெண்ணைக் குறை கூறிவிட்டு வேறு பெண்களை நாடுவது எமது சமூகத்தில் வழக்கில் இருப்பவைதானே.

இப்படிப்பட்ட நிலையில் அந்தக் கணவனே எல்லாம் என விதிக்கப்பட்ட நிலையிலுள்ள பெண், அந்தக் கணவனை தொடர்ந்து கவரும், திருப்திப் படுத்தும் வழிமுறைகளைப் பற்றித் சிந்திக்கத்தானே செய்வாள்.

இப்படியாக பெண் தனது மார்பழகைப் பற்றிக் கவலைப் படுவதற்கான காரணங்கள் எங்கோ இருக்க சமூகத்திலுள்ள அழகு பற்றிய மதிப்பீடுகளையும், திருமணத்தில் பெண்கள் ஆண்களை கொத்தடிமைகள் போல் சார்ந்திருக்கும் அவலத்தையும் விமர்சிக்காமல் பெண்கள் தமது அழகு பற்றிக் கவலைப்படுவதாக விமர்சிப்பது எப்படி நியாயமாகும்.

உயிரியல் அடிப்படையில் பெண்கள் தாம் குழந்தைகளைப் பெற்றாக வேண்டியுள்ளது. பால் கொடுத்தும் ஆக வேண்டியுள்ளது.

ஆனால் இவைகள் இரண்டும் தவிர்ந்த குழந்தை வளர்ப்பில் ஏனைய அத்தனை காரியங்களையும் ஆண்களும் செய்யலாம். ஆனால் எத்தனை பேர் இவ்வாறு செய்கிறார்கள்?

அவசரத்திற்காக குழந்தையின் அழுக்குத் துணிகளைக் கழுவுவதையே தனது கௌரவக் குறைவாகக் கருதும் ஆண்களுக்கு பெண் பால் கொடுப்பது தொடர்பாக விமர்சிக்கும் தார்மீக பலம் எப்படி வந்தது ?

பெண்கள் ஒருபோதுமே விபச்சாரத்தை விரும்பிச் செய்வதில்லை. பெண்கள் பாலியல் நுகர் பண்டமாக ஆக்கப்பட்டு இருப்பதும், தமது பிழைப்பிற்காக தமது பால் ஆற்றல் தவிர்ந்த விற்பதற்கு ஏதும் இல்லாதவாறு பெண்கள் சுரண்டப்பட்டு இருக்கும் நிலைமை தான் விபச்சாரத்திற்கான காரணங்களாக அமைகிறது.

இந்த வகையில் விபச்சாரமானது மோசமான பெண்ணடிமைத்தனத்தின் விளைவாகும். விபச்சாரத்தையிட்டு அவமானப் பட வேண்டியது அதற்கு தள்ளப்பட்ட நிர்க்கதியான பெண்களோ, பெண்குலமோ அல்ல. மாறாக முழு மனித சமூகமும், குறிப்பாக அத்தனை ஆண்களும் அவமானப்பட வேண்டிய விடயம் இது .

மாறாக பெண்களையோ விபச்சாரிகளையோ இழிவுபடுத்துவது என்பது ஆணாதிக்க சமூகமானது தனது அழுக்குகளை மறைத்துக் கொள்ளும் கபடத்தனமாகும். சமர் " பெண்கள் விபச்சாரம் செய்வதற்கான சுதந்திரம் " பற்றி ஒரு வாதத்திற்குக் கூட எடுத்துக் கொள்வது பெண்விடுதலையின் பாலான அவர்களது அக்கறையின் உண்மையான தன்மையையே சந்தேகிக்க வைக்கிறது.

www.tamilarangam.net

பெண்விடுதலைக்காக பெண்கள் குரல் எழுப்ப முனைகையில் ஆணாதிக்க சமூகத்திலுள்ள ஆண்கள் இதே வாதங்களைத்தான் காலாகாலமாக முன் வைத்துள்ளனர்.

இந்த விடயத்தில் சமர் கூட சராசரியான ஆண்களைக் கடந்து விடவில்லை என்பதையே இங்கு காண்கிறோம்.

**கருக்கலைப்பு உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்பது குறித்து . . . .**

கருக்கலைப்புச் சுதந்திரமானது துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்ற ஆட்சேபனை எழுப்பப் படுகிறது. உண்மைதான்!

அதற்கான வாய்ப்புகள் மறுக்க முடியாதுதான். ஆனால் சமூகத்தில் எந்த ஒரு உரிமைதான் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை?

சனநாயகம், சுதந்திரம், சோசலிசம், போராட்டம் போன்ற எதுதான் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை. இந்த உரிமைகள் சில சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்ற காரணத்திற்காக யாராவது ஒருவர் மக்களுக்கு இந்த உரிமைகள் தேவையில்லை என்று கூறத்

தலைப்படுவாரா ?

துஷ்பிரயோகம் நடைபெறாமல் தடுப்பதற்கான வழி குறிப்பிட்ட உரிமைகளை சம்பந்தப்பட்ட மக்களுக்கு வழங்காமல் தடுப்பதல்ல.

மாறாக அந்த உரிமைகளை வழங்குவதுடன் அந்த உரிமைகளை எவ்வாறு பரந்துபட்ட மக்களது நலன்களுக்கு சாதகமாக பயன்படுத்துவது என்பதைக் கற்றுக் கொடுப்பதுமாகும்.

புரட்சியாளர்கள் எப்போதும் மக்களில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும். மக்கள் தமது சொந்த வாழ்க்கையின் ஊடாகவும், சொந்தப் போராட்டங்களினூடாகவும் பெறும் படிப்பினைகளிலிருந்து சிறிது காலம் தாழ்த்தியாவது உண்மைகளைக் கண்டறியும் ஆற்றல் உள்ளவர்கள் என்பதில் நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்.

மாறாக மக்கள் தவறாகப் போய்விடலாம் எனக் கருதி அவர்களது அடிப்படை உரிமைகளை மறுத்து அந்த மக்களை சிறுவர்கள் போல நடத்த முற்படக் கூடாது.

**"சுய கட்டுப்பாடு" தொடர்பாக .**

பெண்கள் தமது உடலிலும் , உடலியற் செயற்பாடுகள் மீதும் தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தி இருந்தேன்.

இவ்வாறு நான் கூறியதை சரியாகக் கிரகித்துக் கொள்வதற்கு எந்தவித சிரமத்தையும் எடுத்துக் கொள்ளாத சமர் இதனை சாதாரண நிலையில் வைத்து புரிந்து கொண்டு இதனை பெண்களின் 'சுய கட்டுப்பாடு' சம்பந்தமான பிரச்சனையாக எடுத்துக் கொண்டு விமர்சிக்க தலைப் பட்டுள்ளது.

இங்கு நான் குறிப்பிட்ட ' தனது உடலின் மீதும் உடலிற் செயற்பாடுகள் மீதும் தமது சொந்தக் கட்டுப்பாட்டை நிறுவிக் கொள்வது' என்பது தமது முழுமையான சம்மதமும் விருப்பமும் இன்றி தனது உடலில், உடலியற் செயற்பாடுகளில் பிறர் தலையீடு செய்ய , திணிக்க, கட்டுப் படுத்த மாட்டார்கள் என்பதற்கான உத்தரவாதமேயாகும்.

www.tamilarangam.net

தனது உடலில் உள்ள கருவை தான் விரும்பினாலும் கூட கலைக்க முடியாது எனும் போது இந்தக் கட்டுப்பாடு அற்றுப் போவதாகத்தானே அர்த்தம் பெறும். இதனைக் கொச்சைத்தனமாக புரிந்து கொண்டு அடிமைகளுக்கும், விலங்குகளுக்கும் கூட 'சுயகட்டுப்பாடு' இருப்பதாக

குறிப்பிடுகிறது.

தான் விற்பனை செய்யப்படுவதை, சித்திரவதை செய்யப்படுவதை ஏன் தான் கொல்லப்படுவதைக் கூட தடுத்துவிட முடியாத அடிமைக்கு தனது உடலின் மீதும் உடலியற் செயற்பாடுகளின் மீதும் சொந்தக்கட்டுப்பாடு இருப்பதாகக் கூறுவது தவறான கருத்தாகும்.

தமது விமர்சனத்திற்கு 'பெண்கள் சுயகட்டுப்பாட்டை இழந்தவர்களா ?' என்று தலைப்பிட்டுள்ளமை மிகவும் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இதனை நாம் புரிந்து கொள்ளுதல் சம்பந்தமான பிரச்சனையாக மட்டும் பார்க்கவில்லை. இதில் ஒருவித வக்கிரப் புத்தியும் வெளிப்படுவதாகவே கருத வேண்டியுள்ளது.

ஆணாதிக்க சமுதாயத்தில் பொதுவாக பல்வேறு துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்கு போட்டியாக வருவதை ஆண்கள் சகித்துக் கொள்வது கிடையாது. இப்படியாக முன்னுக்கு வரும் பெண்களை பின்னே தள்ளிவிட ஆண்கள் பலவிதமான தந்திரோபாயங்களை கையாள்வார்கள்.

அதிலும் குறிப்பாக சமூக , அரசியல் தளங்களில் பெண்கள் ஆண்களுக்கு போட்டியாக வரும்போது ஆண்கள் பாவிக்கும் இறுதி ஆயுதம் பெண்ணின் " நடத்தை " பற்றிய சர்ச்சையை எழுப்புவதாகும்.

சமூக அரசியல் அரங்கிலுள்ள எந்த ஒரு பெண்ணைப் பற்றியும் இப்படியான அவதூறுகள் தாராளமாகவே பரப்பப்படும். இதன் மூலம் அந்தப் பெண்ணை அரங்கிலிருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

தன்னுடன் முரண்பட்டு வாதிக்கும் அல்லது சண்டையிடும் ஒரு பெண்ணை சமாளிக்க முடியாத ஒரு ஆண் ' போடி வேசை' என்று திட்டுவதன் மூலம் சம்பந்தப்பட்ட பெண்ணின் வாயை மூடச் செய்து விடுவான்.

இப்படியாக தனது நடத்தையானது விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படும் நிலையில் பொதுவாக ஒரு பெண் மேற் கொண்டு பேச முனைய மாட்டாள். இது பொதுவாகவே ஆணாதிக்கம் கையாளும் ஒரு வழமையான தந்திரோபாயமே.

சமர் அவ்வாறான தந்திரோபாயத்தில் இறங்கியிருக்க தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

ஒரு பெண் புரட்சிகர வாழ்வில் அடியெடுத்து வைத்தது முதல் இது போன்ற அவதூறுகளை பல ஆயிரம் தடவைகள் கேட்க நேர்கிறது.

சராசரியான ஆண்களால் மாத்திரமன்றி சில நேரங்களில் புரட்சிகர சிந்தனையுடைய ஆண்களிடமிருந்து கூடக் கேட்க நேர்வது வேதனை மிக்கதே.

ஆனால் இவற்றை எல்லாம் முகம் கொடுத்து முறியடிக்காமல் தமது விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளும் பெண்கள் இந்த சலசலப்புகளைக் கண்டு அஞ்சப் போவதில்லை.

www.tamilarangam.net

**சோசலிச நாடுகளும் கருக்கலைப்பும். . .**

சோசலிச நாடுகளில் கருக்கலைப்பு சட்டபூர்வம் ஆக்கப்பட்டு இருப்பதை நான் சுட்டிக் காட்டி இருந்தேன்.

சமர் இதனை குருசேவின் திரிபு வாதத்துடன் தொடர்பு படுத்த முனைகிறது.

இன்று பொதுவாகவே பல்வேறுபட்ட இடதுசாரி அமைப்புக்களும் சமூகத்தில் எழும் பலவிதமான பிரச்சனைகளையும் ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வு காண முனையாமல் அவற்றை ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின், குருசேவ், மாவோ போன்றோரது போக்குகள் என முத்திரை குத்தி ஒதுக்கி விட முனைவதைக் காண்கிறோம்.

இந்த விதமான குறுங் குழுவாதங்கள் புரட்சிகர மாற்றங்களுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை .

கருக்கலைப்பு என்ற பிரச்சனை 1950களுக்குப் பிறகு தான் மேலை நாடுகளில் ஒரு தீவிரமான பிரச்சனையாக முன்னுக்கு வந்தது.

அப்படியான ஒரு பிரச்சனை தமது சமூகத்திலும் எழுந்த போது அந்த சோசலிச நாடுகள் (இவற்றின் சோசலிசம் பற்றி பல பிரச்சனைகள் இருந்த போதிலும் ) அந்தக் கோரிக்கைகளை அங்கீகரித்தன.

எனவே தனது வாழ்நாளிலே தீவிரமான ஒரு பிரச்சனையாக முன்னுக்கு வராத கருக்கலைப்புத் தொடர்பாக லெனினும், ஸ்டாலினும் எப்படி தீர்வு கூறியிருக்க முடியும் ?

அவர்கள் கருக்கலைப்புப் பற்றி எதுவும் சாதாகமாக சொல்லவில்லை என்பதற்காக இந்தக் கோரிக்கையே தவறானது என்பதோ அல்லது லெனினும் ஸ்டாலினும் தவறிழைத்து விட்டதாகவோ கூறுவது தவறானதே.

கடந்த அமெரிக்க தேர்தலில் ஜோர்ஜ் புஷ் கருக்கலைப்பை எதிர்த்தது ஏன் ? அமெரிக்காவை சீரழிவிலிருந்து பாதுகாக்கவா ?

பல்வேறு மக்கள் பிரிவினது நலன்களும் முட்டி மோதும் போதும், பல்வேறு பட்ட காரணிகளது சேர்க்கையில் உருவாகும் இது போன்ற சிக்கலான பிரச்சனைகளை 'ஏகாதிபத்திய சீரழிவு ' என்ற ஒரே கருத்தால் விளக்கிவிட முனைவது இப்படியான அபத்தங்களுக்குத்தான் இட்டுச் செல்லும்.

இந்த விதமான பிரச்சனைகளுக்கு சரியான தீர்வுகளை சில இடதுசாரி அமைப்புக்கள் கண்டறிய முடியாமல் இருப்பதற்கு காரணம் மார்க்சியத்தின் பற்றாக் குறையல்ல, மாறாக மார்க்சியத்தை வரட்டுச் சூத்திரங்களாக புரிந்து கொண்ட சில இடதுசாரிகளின் பற்றாக் குறைகளே.

மேற்கு நாடுகள் மட்டும் அந்த சமூகங்கள் சீரழிந்து போகட்டும் எனக் கருதி இந்தக் கோரிக்கைய உடனடியாக அங்கீகரித்து விடவில்லை.

இந்த நாடுகளில் கூட பெண்களின் நீண்ட காலப் போராட்டத்தின் பின்பே இந்த உரிமைகளைப் பெற்றுக் கொண்டனர்.

**பெண்விடுதலைக்கான போராட்டமும் ஆண்களின் பங்களிப்பும். . .**

பெண்விடுதலைக்கான போராட்டத்தில் ஆண்கள் பங்களிக்க முடியாதா ? என்று கேள்வி எழுப்பும் சமர் என்னை ஆண் எதிர்ப்பாளர் என்று குற்றஞ் சாட்டுகிறது.

சுரண்டும் வர்க்க பின்னணியிலிருந்து வந்த பல தனி நபர்கள் உழைக்கும் மக்களது போராட்டத்தில் முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளனர் என்பது உண்மைதான்.

ஆனால் அவர்கள் இவ்வாறு செயற்படுவது இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதால் சாத்தியப்பட்டது.

1. தமது வர்க்க நலன்களை நிபந்தனை யின்றி கைவிட்டது.
2. உழைக்கும் மக்களது போராட்டத்தில் இருந்து கற்றுக் கொள்ள தயாராக இருந்தமை.

ஒடுக்கப்பட்ட பெண்கள் தாமே நேரடியாக போராடாமல் தமது விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பது உண்மையாயினும் இது புரட்சிகர எண்ணங் கொண்ட ஆண்களது பங்களிப்புக்களை மறுப்பதாக அர்த்தப்படாது.

பெண் விடுதலைக்கான போராட்டங்களில் ஆண்கள் காத்திரமான பங்களிப்புக்களை செய்வதாயின் அவர்கள் இரண்டு நிபந்தனைகளை கட்டாயம் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. ஆணாதிக்க நலன்களை நிபந்தனை யின்றிக் கைவிடுவது.
2. பெண்களின் போராட்டங்களில் இருந்து கற்றுக் கொள்ள தயாராக இருப்பது.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் முழுமைப் படுத்தாமல் ஒருவர் பெண்விடுதலைக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஆணாதிக்க சித்தாந்தத்தில் இருந்து முற்றாக விடுபட்டு விட்டார் என்று அர்த்தப்பட மாட்டாது.

இப்படிப்பட்ட ஒருவரிடம் ஆணாதிக்க கருத்துக்கள் வெளிப்படும் போது அதனைச் சுட்டிக் காட்டி விமர்சிப்பது எப்படி ஆண் எதிர்ப்பு வாதமாகும்.

போராடும் பெண்களது கோரிக்கைகளை நுணுக்கமாக அணுகி அந்தக் கோரிக்கைகளுக்குப் பின்னாலுள்ள பெண்களது விடுதலைக்கு அவசியமான நிலைமைகளைப் புரிந்து கொள்ள முனைய வேண்டும். மாறாக தமக்குள் ஏற்கனவே ஆழமாகப் பதிந்துள்ள (பொதிந்துள்ள) ஆணாதிக்க கருத்துக்களில் இருந்து பெண்களது

கோரிக்கைகளை அணுகி அவற்றை சீரழிவு என்று அவதூறு செய்வது தவறானது.

ஸ்தூலமான வாழ்வில் குடும்பதினுள்ளும் பொது அரங்கிலும் பெண்கள் தனிப்பட்ட ஆண்களது ஒடுக்குமுறைகளை பேரடியாக முகம் கொடுக்க நேர்ந்தாலு கூட பெண்களது எதிரிகள் இந்த ஆணாதிக்க சமூக அமைப்பே அன்றி தனிப்பட்ட ஆண்களல்ல.

ஆணாதிக்க சமூக அமைப்பானது பெண்ணடிமைத்தனத்தை தொடர்ந்து பேணுவதில் ஆண்களது நலன்கள் பலவற்றை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதுடன் ஒரு பலமான ஆணாதிக்க சித்தாந்தத்தை உருவாக்கி சமூக மதிப்பீடுகள், நடைமுறைகள் அனைத்தையுமே ஆணாதிக்க நலன்கள் சார்ந்தனவாகவே வடிவமைத்துள்ளன.

சமூகத்தில் நடைமுறையில் இருக்கும் ஆணாதிக்க சித்தாந்தமானது தனிப்பட்ட ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் சமூகம் உருவாக்கி வைத்துள்ள ஆணாதிக்க நியமங்களின் படியே நடக்கும் படி வற்புறுத்துகிறது.

www.tamilarangam.net

இந்த நியமங்களைக் கடந்து வருவது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்குமே கஸ்டமானதுதான். பெண்களை சமத்துவமாக நடத்த முற்படும் அரிதான ஒரு சில ஆண்கள் கூட இந்த சமூகத்தால் ஆண்களால் மட்டுமல்ல பெண்களாலும் கூடவே சமுக நியமங்களை மீறியமைக்காக இழிவு படுத்தப் படுகின்றனர்.

உதாரணமாக சீதனம் வாங்கி திருமணம் ஒருவனை எமது சமுகம் வித்தியாசமாகப் பார்ப்பதில்லை. மாறாக ஒரு ஆண் சீதனம் வேண்டாம் என்று கூறினால் அவனில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமோ என்று மணப்பெண்ணே சந்தேகிப்பாள்.

குடும்பத்தில் முடிவுகளை எடுக்கும் போது மனைவியைக் கலந்து ஆலோசிக்கும் கணவனை, வீட்டு வேலைகளை பங்கிட, உதவ முயலும் ஆண்களை சமூகத்திலுள்ள ஆண்கள் மட்டுமல்ல கணவனின் தாயும், அயல் வீட்டுப் பெண்கள் கூட இழிவாகவே பார்ப்பார்கள்.

இப்படிப் பட்ட ஆணைப் பற்றி 'மனைவிக்கு பயந்தவன் ' என்று பொதுவாக அயலில் பேசிக் கொள்வார்கள். இந்த நிலையில் பெண்ணிலைவாதிகளது தெளிவான இலக்கு இந்த ஆணாதிக்க சமுக அமைப்பேயன்றி தனிப்பட்ட ஆண்கள் அல்ல.

இப்படிப் பட்ட பெண்ணிலை

வாதிகளை ஆண் எதிர்ப்பாளர்கள் என்பது பெண்விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதே ஆகும்.

**சர்வதேச அளவில் பெண்விடுதலை தொடர்பாக நடைபெறும் விவாதங்கள். .**

பெண்விடுதலை தொடர்பாக சர்வதேச அளவில் நடைபெறும் விவாதங்களிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் சமரோ அவ்வாறு நடைபெறுவனவற்றை தேடிப் பார்க்கும் எந்த சிரமத்தையும் மேற் கொள்ளாது என்ன ? யார் ? எங்கே ? என்ற கேள்விகளை மட்டும் அடுக்கி வைத்துள்ளது.

இதற்கான பதில்களைக் கண்டறிய அந்த நாட்டில் வெளிவரும் ஒரு செய்திப் பத்திரிகையின் கடந்த ஒருவருட இதழ்களை தட்டிப் பார்த்திருந்தால் போதும்.

ஆயினும் வாசகர்களின் நன்மை கருதி சில தகவல்களை சுருக்கமாக

** முன்னாள் அமெரிக்க சனாதிபதி புஷ் தனது பதவிக் காலத்தின் இறுதிப் பகுதியில் தொம்சன் என்பவரை உயர் நீதி மன்ற நீதியரசாக நியமனம் செய்ய முன்வந்தார்.

இந்த முன் மொழிவிற்கு எதிராக ஹில் என்ற பெண்ணால் தொம்சன் பெண்களை பாலியல் வதை ( இம்சை) செய்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது.

இது தொடர்பாக கொங்கிரசின் சிறப்புக் கொமிட்டி பகிரங்கமாக விசாரணை செய்தது . முழுக்க முழுக்க ஆண்களைக் கொண்ட இந்த கொங்கிரஸ் குழுவானது ஹில்லினது குற்றச்சாட்டுகளில் இருந்து தொம்சனை விடுவித்து அவரது நியமனத்தை உறுதி செய்தது.

ஆயினும் இந்த விசாரணை அமெரிக் சமுகத்தினுள் இதுவரை காலமும் புகைந்து கொண்டிருந்த பல பிரச்சனைகளை வெளிக் கொணர உதவியது.

அன்றாடம் பெண்கள் வீட்டிலும் பொது இடங்களிலும், வேலை செய்யும் இடங்களிலும் பாலியல் தொல்லைக்கு உள்ளாவது பற்றி

www.tamilarangam.net

விரிவாக விவாதிக்கவும் இதனூடாக வேலை செய்யும் இடங்களில் புதிய ஒழுக்கக் கோவைகளை வகுப்பதற்கும் இது இட்டுச் சென்றது.

**. அமெரிக்காவில் பெண்களின் கருக்கலைப்பு எதிராக பழமைவாதிகள் நடாத்திய தாக்குதல்களும், அதனை எதிர்த்து பெண்கள் நடாத்திய போராட்டங்களும், இது அமெரிக்க சனாதிபதி தேர்தல் விவாதம் வரை கருக்கலைப்பு பிரச்சனையை எடுத்துச் சென்றது.

**. யேர்மனி ஒன்று பட்ட பின்பு அதுவரை காலமும் கிழக்கு மேற்கு யேர்மனிகளில் நடைமுறையிலிருந்து வந்த கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை நீக்கு முகமாக முன்மொழியப்பட்ட சட்ட முன்வரைபுகளும், இது தொடர்பான விவாதங்களும் பரவலாக இடம் பெற்ற போது இந்த விவாதங்களில் ஒரு கட்டத்தில் இந்தப் பிரச்சனையில் யேர்மனி நாடாளுமன்றத்தில் உள்ள பெண் அங்கத்தவர்கள் மட்டுமே வாக்களித்து தீர்மானிப்பதே சரியானது என்ற கருத்தும் முன்வைக்கப் பட்டது.

**. கணவன் தன் மனைவியுடன் அவரது அனுமதியின்றி பலவந்தமாக பாலுறவு கொண்டால் அது பலாத்காரமாகவே கருதப் படல் வேண்டும் என்ற பிரித்தானிய நீதிமன்றங்களின் அதியுயர் அமைப்பின் தீர்ப்பு.

**. நோர்வேயில் பெண்கள் bar களில் அரைநிர்வாணமாக( toppløsservering og striptease) பணியாற்றுவதை எதிர்த்த பெண்களின் போராட்டம்.

** இங்கிலாந்தில் தனது கணவனை கொலை செய்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப் பட்டிருந்த ஒரு பெண்ணை பெண்ணிலைவாதிகள் தமது தீவிரமான போராட்டத்தின் மூலம் விடுதலை செய்தார்கள்.

இந்த போராட்டத்தின் போது குடும்பத்தினுள் நடைபெறும் வன்முறைகள் பற்றியும் அவை எவ்வளவு மோசமாக பெண்களை ஒடுக்குகின்றன எனவும் எடுத்துக் காட்டினார்கள்.

குறிப்பிட்ட சம்பவமானது மனைவியை மிகக் கொடுமையாக சித்திரவதை செய்யும் கணவனிடம் இருந்து தப்பித்துக் கொள்ள அந்த பெண் செய்த வெறும் தற்காப்பு நடவடிக்கையே என்பதை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபித்தார்கள்.

நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பானது குடும்பத்தினுள் நடைபெறும் வன்முறைகளின் மோசமான தன்மைகள் பற்றி சமூகத்தின் அக்கறையை தீவிரப் படுத்தியது.

இப்படியாக பல்வேறு நாடுகளில் நடைபெறும் பலவிதமான விவாதங்களும், போராட்டங்களும் பெண்ணொடுக்கு முறையில் பலதரப்பட்ட வடிவங்களை அம்பலப் படுத்தி அதற்கு எதிராக பெண்களின் விழிப்புணர்வை தட்டி எழுப்பி வருகிறது.

பெண் விடுதலையில் உண்மையிலேயே அக்கறை உடையவர்கள் இவற்றில் இருந்து படிப்பினையைப் பெற்றுக் கொள்ளவும், தமது சமூகத்திலுள்ள பெண்ணடிமைத்தனத்தின் குறிப்பான வடிவங்களை இந்த வெளிச்சத்தில் இனங் கண்டு கொள்ளவும், அந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போராடும் பெண்களை ஆதரிக்கவும் முன்வர வேண்டும்.

www.tamilarangam.net

இவற்றை வெறுமனே சீரழிவுகள் என்று ஒடுக்கி விடுவதானது சமூக மாற்றத்திற்கு எந்த வகையிலும் உதவாது என்பதுடன் சம்பந்தப்பட்ட ஆண்கள் தமது நலன்களை இதன் மூலம் பாதுகாத்துக் கொள்வதாகவுமே அர்த்தப்படும்.

சமர் தமிட் சமூகத்தின் கலாச்சாரங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது பொதுவாகவே அவற்றை பிற்போக்கு நிலப்பிரபுத்துவ கலாச்சாரம் என்றே குறிப்பிடுவதுண்டு.

ஆனால் நடப்பு சமூக அமைப்பில் உள்ள குடும்பம், பாலுறவு, மறு உற்பத்தி, ஒழுக்க நெறிகள் போன்றவற்றை கேள்விக்கு உள்ளாக்க முனைகையில் (இன்னும் எந்தவிதமான மாற்றை முன் வைப்பது என்ற கேள்வி கூட எழவில்லை) அவற்றை தீவிரமாக எதிர்க்கும் சமர் எனது முயற்சிகளை சீரழிவு என்கிறது.

இதைப் பார்க்கும் போது இன்று எமது சமூகத்தில் நடப்பிலுள்ள குடும்பம், பாலுறவு, மறுஉற்பத்தி, ஒழுக்க நெறிகள் போன்றவற்றை

சமர் முற்றிலும் நியாயம் எனக் கருதிக் கொண்டு அவற்றை அப்படியே காக்க முனைவதாக கருத வேண்டி இருக்கிறது.

" வர்க்க சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு கருத்தின் பின்னாலும் ஏதாவது ஒரு வர்க்கத்தின் முத்திரை பதிந்திருக்கும் " என்றார் லெனின்.

அதுபோலவே நீண்ட கால வரலாற்றைக் கொண்டதும், சமூகத்தில் நன்கு வேர்விட்டு இருப்பதுமான ஆணாதிக்கத்தின் நலன்கள் சமூகத்தின் எல்லா துறைகளிலும், நிறுவனங்களிலும், சிந்தனைகளிலும், மதிப்பீடுகளிலும் ஊடுருவி இருக்கவே செய்கிறது.

இந்த வகையில் சமூகத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் பெண்ணிலைவாத கண்ணோட்டத்துடன் அணுகி அவற்றில் மறைந்திருக்கும் ஆணாதிக்க நலன்களை அம்பலப் படுத்தி ஆண் -- பெண் சமத்துவத்தை உத்தரவாதப் படுத்தும் மாற்றுகளை முன்வைத்து அந்த முன்மொழிவுகளை யதார்த்தமாக்கப் போராடுவது பெண்விடுதலையுடன் அக்கறையுள்ள ஒவ்வொருவரதும் கடமை ஆகும்.

ஒன்று மட்டும் நிச்சயமானது. நாம் உருவாக்கப் போகும் புதிய புரட்சிகர சமுதாயத்தில் இன்றுள்ள பொருளாதார, அரசியல் வடிவங்கள் மாத்திரமன்றி ஏனைய நிறுவனர்கள், நடைமுறைகள், சிந்தனைகள், மதிப்பீடுகள் அனைத்துமே மாறத்தான் வேண்டி இருக்கும்.

அந்த வகையில் நடப்பிலுள்ள பலவேறு ஒழுங்கு முறைகளையும் கேள்விக்கு உள்ளாக்குவது இன்றைய தேவையாகும். இப்படியாக கேள்விக்கு உள்ளாக்குவதை தடுக்க முனைவதானது நடப்பிலுள்ள ஆதிக்க வடிவங்களுக்கு சேவை செய்யுமே ஒழிய புரட்சிக்கு அல்ல.

பெண்விடுதலை தொடர்பான கருத்துக்கள் எமது சமூகத்தில் போதியளவு விரிவாகப் பரப் படாத நிலையில் எமது சமூகத்திலுள்ள ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கூட ஆணாதிக்க சித்தாந்தத்தின் பிடியில் சிக்கி இருப்பதைக் காண முடிகிறது.

எமது சமூகத்திலுள்ள புரட்சிகர சிந்தனையுடைய ஆண்கள் கூட தம்மை ஆணாதிக்க சித்தாந்தத்தின் பிடியிலிருந்து முற்றாக துண்டித்துக் கொண்டதாக கூறமுடியாது.

www.tamilarangam.net

இப்படிப்பட்ட நிலையில் சமர் இந்த விதமான நிலைப்பாட்டினை வந்தடைந்தது எனக்கு ஆச்சரியமாக படவில்லை.

தற்போதைய தேவை யாதெனில் உண்மையான சமூக மாற்றத்திற்காக விளைபவர்கள் என்ற வகையில் புரட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தம்மைப் பிடித்துள்ள தவறான கருத்துக்களை விடுவித்துக் கொள்ள அயராது பாடுபடுவதுதான்.

புதிதாக ஒரு கோரிக்கை வரும் போது அந்தக் கோரிக்கையின் பின்னாலுள்ள நலன்களை துல்லியமாக இனங்காணவும், சமூக மாற்றத்திற்கும் அந்தக் கோரிக்கைக்கும் இடையிலான உறவுகளை திட்ட வட்டமாக வரையறுத்துக் கொள்ளவும் முயல வேண்டும். புரட்சியாளர்கள் இதற்காக அதிகம் முயற்சி செய்ய வேண்டும்.

இன்னும் குறிப்பாகக் கூறுவது எனில் புதிய பிரச்சனைகளை அணுகும் போது ஒவ்வொருவரும் தாம் புரட்சிகர மாற்றத்தை உருவாக்க விளைபவர்கள் என்ற பொறுப்புணர்வுடன் அணுக வேண்டும்.

தாமே பல ஆதிக்க சித்தாந்தங்களில் இருந்து முற்றாக விடுபடாத நிலையில் தமது தவறான கண்ணோட்டங்களிலிருந்து பிரச்சனைகளை மதிப்பீடு செய்வதும் எதிர் தரப்பார் மீது முத்திரை குத்துவதும் நாம் காண விளையும் சமூகப் புரட்சிக்கு எந்த விதத்திலும் உதவ மாட்டாது என்ற புரிதலானது இப்போது மிகவும் அத்தியாவசியமானது.


சரிநிகர்
18/2 அலோ சாலை,
கொழும்பு - 03
தொலைபேசி: 576704

www.tamilarangam.net

# இருப்பற்ற பிரஜைகள்.

நகரமெங்கும் விழாக்கோலம்.
நிக்கோலும் பேற்றரும்
அல்பிரேடாவும் அணாவும்
நாளிகைகளை நகர்த்திடுவர்
குதூகலமாய்.

ருமேனியத் தோழியே !
மார்க்குகளுக்காய்
மக்டொனாள்ஸ் வாசல்களில்
பஸ்தரிப்புக்களில்
உன்
மெல்லிய உடலை
சுமக்கும் பாதங்களின்
ஊர்வலம்.

இந்த
எத்தியோப்பிய
பிஞ்சுக் குழந்தையைப்
பாருங்கள்.
எதிர்காலமறியா
ஏக்கங்களோடு. . .

நாடுதிரும்பும்
நாள் நெருங்கி விட்டதா
என்னருமை
ஈரானிய நண்பா ?
கொடிகள் நாட்டுவதில்
கதிரைகள் கைப்பற்றுதலில்
போட்டிகள் நடக்கிறது
பெரும் யுத்தங்களாய் !
சிதைக்கப்படுவது சொந்தக்
கூரையல்லவா ?

கூட்டங் கூட்டமாய்
குடியேறினோம்
விருட்சங்களா
நிழல்களை வழங்குமென்று ?

யேர்மனியத் தெருவிலே
ஆபிரிக்க மனிதன்
கொன்றெறியப்பட்டான்
அநாதரவாய்.

இனவாத நெருப்பினிலே
இன்னும்
எத்தனை மனிதங்கள்
சுட்டெரிக்கப்படுமோ ?

**நிரூபா.**

# சுப முகூர்த்தம்.

ஆவணிமாதம் முதலாம் நாள்
வெள்ளிக்கிழமை ஓர் சுப முகூர்த்தம்
தீர்மானிக்கப்பட்ட வேளைக்காய்

சிலர் சீர்வரிசைப் பேச்சோடு
பலர் சீரான வரிசையற்று
. . . பெண்ணியம் என்றொன்று
விலை பேசப்பட. . .
ஏழ்மையின் உயிரோடு
ஓர் தாய்மை எரிந்து. . .

எரிவுகளும்
எரியல்களும்
என்னகத்தே மட்டுமல்ல
என் தாயிடமுமே அதிகமுண்டு. .

நள்ளிரவு நாயகன்
தட்டுவம் ஏந்தி நின்றான்.

மணிவாளன் பிறப்பிற்காய்
ஓர் தொகையும். .
கல்விக்காய். கல்வி
. . கற்றிருந்தால் !
பெருந்தொகையுமாக. .
ஆண்மையும்
ஆண்மைக் குறிக்குமாய்
ஓர் வெந்நீசு. .

எரிவுகளும்
எரியல்களும்
இத் தாய்மையுள்ளே
முக்குளித்து
எரிமலையாய். .

முன்னொரு நாள்
ஓர் தாயால். .
இன்றதனால் இத்தாய்மை
எரிமலையாய். . .

கேட்பார் கேட்டிருக்க
கொடுப்பார்க்கு
என்ன மதி.
கொடுப்பார் மறுத்திருக்க
கேட்பார்க்கு
ஈமக்கிரிகை செய்வோம்.

01/01/ 93

**லோகநாதன். செ**

www.tamilarangam.net

## வாசகர் பக்கம்

அன்புடையீர்,

சக்தி 2 : 4 மிகவும் மெலிந்துள்ளது. சிறிய அச்செழுத்து ஒரு கொலத்தையே உடைய பக்கங்களில் வரும் போது பார்க்க எடுப்பாக இராது.

அச்சுப் பதிவு முன்னைய இதற்களை விட தரத்திற் தாழ்ந்து விட்டது.

பெண்கள் மீதான சமூகத் தீர்ப்புக்கள் கட்டுரையில் வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ள முறை பற்றிய சில கருத்து முரண்பாடுகள் உள்ளனவாயினும், அது வரவேற்கத் தக்க கட்டுரை. அதில் உள்ள விடயங்கள் உரக்கப் பேசப் பட வேண்டியன.

ஒரு அப்பட்டமான தவறு தவிர்க்கப் பட்டு இருக்கலாம் : அலிகள் என்போர் பெண் தோற்றமுடைய ஆண்களே. இவர்களை விட பாலியற் குறைபாடுள்ள ஆண்கள் நபும்சகர் என நிந்தனையாக அழைக்கப் படுவது உண்டு.

ஷமிஹ் அல்களிம் கவிதைக்கு கீழ் அவர் இஸ்ரேலிற் பிறந்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். 1939 இல் இஸ்ரேலில் பிறக்கவில்லையே. அப்போ அங்கு இருந்த தேசம் பலஸ்தீனம்.

அன்புடன்
சிவசேகரம்.

✻

சக்தி ஆசிரியர் குழுவினருக்கு,

மெலிந்து போன சக்தி கிடைத்தது.

அட்டைப் படத்தை வாசகங்களுடன் பிரசுரித்துள்ளீர்கள், அவ் வாசகங்கள் எதையுமே தமிழுக்கு மொழி பெயர்க்காமலே விட்டு விட்டீர்கள்.

ஆசிரியர் குழுவில் மொழிபெயர்ப்பாளர்கள் இருந்தும் (?) இந்த தவறா அல்லது வாசகர்கள் மீதுள்ள அலட்சியமா ?

பெண்களும் மக்கள் தொடர்பு சாதனங்களும் பல விடயங்களைத் தொட்டு இருந்த போதிலும் பல விடயங்களை விவாதிக்காமலே விட்டு விட்டது.

நந்தினியின் மூளைக்குள் ஓர் சமையலறை மிகவும் நன்றாக இருந்தது.

ஆசிரியர் தலையங்கம் உங்கள் பார்வையை சொல்ல முற்பட்டாலும் இவ்வளவு கோசம் தேவையா ?.

எழுத்துப் பிழைகள் பற்றி. . நீங்கள் அக்கறைப் படுவதே இல்லையா ?

இப்படிக்கு.
க. மதிவதனி.
( இம் மடல் சுருக்கப் பட்டுள்ளது.)

✻

சக்தி இதழ் 2 :4 இல் வெளிவந்த அட்டைப் படம் தொடர்பான ஒரு விமர்சனத்தை முன் வைக்கிறோம்.

அட்டைப் படத்துடன் வெளியிடப்பட்ட கோசங்களை இவ் விமர்சனத்துடன் மொழி பெயர்க்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழிபெயர்ப்பு சிலவேளை முழுமையாக இல்லாவிட்டாலும், அதில் உள்ள கருத்தை சரியாக மொழி பெயர்த்துள்ளோம் என நாம் கருகிறோம்.

முழுமையான பெண் விடுதலை.

பெண்ணின் உடலை விற்பனை செய்யாதே.

மேலாடை எதுவும் இன்றி உணவு பரிமாறுவதை நிறுத்து.

ஐரோப்பிய இணைவிற்கு எதிராக பெண்கள் போராடுவோம்.

பெண்கள் போராட்டம்(விடுதலை) வர்க்க போராட்டம்.

மேல் உள்ள கோசங்கள் உங்கள் அட்டைப் படத்துடன் முற்றாக முரண் படுகிறது.
உங்கள் கோரிக்கைகளையே தவிடு பொடியாகும் வண்ணம் அமைந்துள்ளது.

அட்டைப்படம் மேலாடை அற்ற ஒரு நிர்வாணப் படம். இரண்டாவது இப் பெண் உட்பட்ட பிரஞ்சு முதலாளித்துவப் புரட்சிக் கால கட்டத்தில் வெளிப்பாடாக வந்த முக்கிய படம் இது ( நாம் தெளிவான இரண்டு படங்களை இணைத்துள்ளோம் )

இனி விமர்சனத்திற்கு வருவோம்.

பெண்களின் போராட்டம் வர்க்கப் போராட்டம் எனில் ; எப்படி முதலாளித்துவ விடுதலையை சித்தரிக்கும் ஒரு படத்தையும் அத்துடன் சீரழிந்த முதலாளித்துவ பெண்விடுதலலையைக் இப் படத்தை உயர்த்திய படி வர்க்க போராட்டத்தை ஒருக்காலும் பெற முடியாது.

நாம் அனுப்பிய மூலப் படத்தில் அப் பெண்ணின் கீழ் ஒரு ஆணின் தோற்றம், பார்வை என்பன காம நோக்கிலான முதலாளித்துவ பெண் சீரழிவை கோாரி நிற்பதைக் காணலாம்.
பெண் கவர்ச்சி பொருளாக அரை நிர்வாணமாக பெண்களை வீதியில் நிற்க கோரி நிற்கிறது.

இப்படத்தை தூக்கி ரோட்டில் போராடிய அமைப்பின் அரசியல், நோக்கு கேள்விக் உள்ளாவதால் சக்தி அவர்களை வர்க்க நிலையில் நின்று ஆராய வேண்டிய தேவை உள்ளது.

அரை நிர்வாண பெண்ணின் படத்தை தூக்கிய படி அரை நிர்வாணமாக உணவு பரிமாறுவதை நிறுத்து எனக் கோருவது என்பது இயல்பாக எதை சாதிக்கும் ? பெண்களை தாமே கேலிக்குரியவர்களாக மாற்றியபடி பெண்விடுதலை கோருவது ஆகாதா ? பெண்ணின் உடலை விற்பனை செய்யாதே என்றபடி அரை நிர்வாண படத்தை தூக்கின் அது உங்கள் கோரிக்கையை தவிடு பொடியாக்குகிறது.

நீங்கள் எதிர்காலத்தில் பெண்விடுதலை உண்மையில் விரும்பின் அனைத்து கட்டுரைகளிலும் ஆழமாக ஆராயவும், அது தொடர்பாக விமர்சிக்கவும் வேண்டும்.

அப்போது நீங்கள் சரியாகவும், பெண்களை வென்று எடுத்து அமைப்பு ஆக்க முடியும்.

கிளாரா செற்கின் குறிப்பிட்டது போல் வர்க்கப் போராட்டத்தை உயர்த்தியபடி பெண்கள் நமது விடுதலையை வென்று எடுக்க வேண்டும்.

www.tamilarangam.net

பெண் எழுச்சிக்குப், போராடினார் என்பதற்காக அவை எல்லாவற்றையும் ஆதரிக்காது அவைகளை விமர்சன நோக்கிலும் ஆராய்ந்து சரி பிழைகளை விமர்சிக்க வேண்டும்.

கிளாரா செற்கின் குறிப்பிட்டது போல் எல்லா பெண்களும் ஒரு அமைப்பாக முடியாது.

வர்க்க அடிப்படையில் இரண்டு வகையாக பெண்கள் பிரிவர் என்பதை கவனத்தில் கொண்டு ஆழமாக கருத்துக்களை ஆராய வேண்டும்.

வர்க்க அடிப்படையை உயர்த்திய படி பெண்விடுதலையை கோரின் 'சமர்' தோழமையுடன் ஒத்துழைக்கவும் கருத்துக் கூறவும் தயாராக இருக்கிறது.

சமர்.

*

## சக்தி 3 : 1 உங்கள் கரங்களில் . . .

**வழமைபோல தாமத்துடன். .**

**எழுத்துப் பிழைகளை ' கொலைக் குற்றமாகக் ' கருத்தி விமர்சனங்களை முன்வைத்த வாசக நண்பர்கட்கு அன்புடன்,**

**இயந்திரம் விழுங்கிய தலைநகரில் நாமும் ஏதோ ஒரு விதத்தில் நேரத்தின் அடிமைகளாகி விட்டோம்.**

**இயன்றவரை இப்பிழைகளை தவிர்க்க முயற்சிக்கிறோம். இதனால் வாசகர்கட்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மன்னிப்புக் கோருகிறோம்.**

**" அட்டையில் பிரசுரிக்கப்பட்ட வாக்கியங்களை மொழிபெயர்க்க தவறிய எமது கவனக் குறைவிற்கு மன்னிக்க வேண்டுகிறோம். "**

www.tamilarangam.net



கலைஇலக்கிய சமூக விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்களை சக்தி உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறாள். ஆக்கங்கள் சிறுகதைகளாகவோ, தொடர் கதைகளாகவோ, கட்டுரைகளாகவோ, மொழிபெயர்ப்புக்களாகவோ அமையலாம்.

ஆண்டுச் சந்தா விபரம்

ஸ்கண்டிநேவியா : Nkr 100

ஏனைய நாடுகள் : U$ 20

இலங்கை : இலவசம்

தபாற்கணக்கிலக்கம் : 0824 038 3676

SAKTI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY
POSTGIRO : 0824 03 836 76

**சக்தி 3 : 2 இல்**

**"நோர்வேஜியப் பெண்களது கருக்கலைப்பு உரிமைப் போராட்ட வரலாறு."**

**" கடவுளே இது உண்மையா ?**

**" பெண்களும் பாலியலும் "**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்